


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 12, இதழ் - 2 மார்ச் - ஏப்ரல் 2026



R4898

## PRIDE OF HEART ABOMINABLE
## மனமேட்டிமை அருவருப்பானது

“மனமேட்டிமை உள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்.” நீதிமொழிகள் 16:5

மனமேட்டிமை விழுந்து போன மானிட மனதின் கண்டிக்கத்தக்க குணங்களில் ஒன்றாக இருக்கிறது. வேத வாக்கியங்களானது இருதயத்தின் இரண்டு நிலைமைகளாகிய சரி மற்றும் தவறு என்ற இரண்டையும் அங்கீகரிக்கின்றன. அன்பு என்கிற ஒரு குணத்தை தேவன் அங்கீகரிக்கிறார்; சுயநலத்தை நிராகரிக்கிறார். எல்லா சுயநலமும் தேவனுடைய பிரமாணத்தால் எதிர்க்கப்படுகிறது. சுயநலமான எதுவும் தேவனுடைய நோக்கத்திற்கு எதிரானது, மனமேட்டிமை கர்த்தருக்கு அருவருப்பானது. ஏனெனில் மனமேட்டிமை கொண்ட எந்த சிருஷ்டியும் பிரபஞ்சத்தில் இல்லை. யாராவது பெற்றிருக்கிற அனைத்தும் ஒரு பரிசு. அது அவனது சொந்த உற்பத்தியோ அல்லது சிருஷ்டிப்போ இல்லை. தேவன் ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது.” (யாக்கோபு. 1:17) நாம் பெற்றிருப்பது அவரது நிறைவாக இருக்கிறது. ஆகையால் மன மேட்டிமை உள்ளவர் எவரும் தேவனுடைய பார்வையில் மிகவும் கண்டிக்கப்படத்தக்கவர்கள். ஏனெனில் அவன் கிருபையை, ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறவனாக இருக்கிறான். தேவனுடைய அனைத்து ஜீவிகளும் அவரையே சார்ந்திருக்கின்றன.

உலகப் பிரகாரமான மேட்டிமை தேவனில் விசுவாசம் மற்றும் அவருக்கு கீழ்ப்படிதலை எதிர்க்கிறது. நல்ல தைரியமும் கர்த்தரிடத்தில் முழு நம்பிக்கையும் உடைய தேவனுடைய ஜனங்கள் மட்டுமே இந்த ராட்சத பெருமையை ஜெயங்கொள்ள முடியும். ஜெயத்தை முழுமையாக்குவது அவசியம். மேட்டிமையானது, மறுபடியும் எழும்பி நம்மை அழிக்காதபடிக்கு, அதன் ஒவ்வொரு வடிவத்திலும முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். இந்த சண்டையை ஒவ்வொருவரும் தனியாக போரிட வேண்டும். ஜெயங்கொள்ளுவதற்கு ஏற்ற சரியான ஆயுதம் ஆவியின் பட்டயமாகும். இதுவே தேவனுடைய பார்வையில் சந்தோஷப்படுத்துவதாகவும் ஏற்புடையதாகவும் இருக்கிறது. “தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்.” (லூக்கா 18:14)

R4900

## WHAT THE CHURCH SACRIFICES
## சபை எதை பலியிடுகிறது

பலி என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவது தேவனுடைய சித்தம் நம்மில் நிறைவேற நம்முடைய சித்தத்தை அர்ப்பணிப்பதை குறிக்கிறது; இரண்டாவது மகா பிரதான ஆசாரியரின் வேலையை குறிப்பிடுகிறது. அவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். அந்த அர்ப்பணத்தை அவர் தேவனுக்கு பிரியமானதாக ஆக்குகிறார். முதன்மையாக நாம் பெற்றிருக்கிற பூமிக்குரிய உரிமைகள், சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்களை பலியிடுகிறோம். ஏனெனில் இவைகளைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் சிலவற்றை விசுவாசத்திற்காக கொடுக்கிறோம். ஆயிரம் வருட யுகத்தில் மனுக்குலம் முழுவதும் பரிபூரணத்தை திரும்ப பெறுகிற சலுகையை பெறக்கூடிய ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார் என்று நாம் விசுவாசத்தினால் நம்புகிறோம்; விசுவாசத்தினால் திரும்பப் பெறுகிற சலுகைகளில் நமது பங்கை விட்டுவிடுகிறோம் அல்லது கை விடுகிறோம். இவ்விதமாக விட்டுவிடுகிற நமது கொள்கை நாம் பெற்றிருப்பதை அர்ப்பணித்தல் ஆகும். இரண்டாவதாக நாம் விட்டுவிடுவது தேவனுடைய மாபெரும் திட்டத்தில் விசுவாசத்தினால் நாம் பெற்றிருப்பதை விட்டுவிடுதல் ஆகும்.

எனினும் அப்போஸ்தலர் உபதேசிப்பது போல, பலி கொடுப்பதற்காக வருகிற மறுசீரமைப்பு ஆசீர்வாதங்களுக்கு பாராட்டுதலை பெறுவது ஒருவருக்கு அவசியமில்லை. (ரோமர்12:1) மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களை பற்றிய அறிவு மீட்கும் பொருளின் அறிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மற்றவர்கள் இதை பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருக்கவில்லை என்பதை நாம் காண்கிறோம். கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினவர்கள் அவர்கள்

பெற்றிருக்கிற அனைத்தையும் விட்டுவிட்டபடியால் இது மறுசீரமைப்பையும் உள்ளடக்கியதாகும். அறுப்புக்கு முன்பாக வாழ்ந்த பரிசுத்தவான்கள் மறுசீரமைப்பு பற்றிய இந்த அறிவு இல்லாதிருந்தாலும் இரட்சகர் மேலிருந்த விசுவாசத்தின் மூலம் பிரியமான பலியை செலுத்தினார்கள்.

விரும்பிக் கொடுத்தல், பலி, அர்ப்பணம் முதலான வார்த்தைகள் சில சமயங்களில் வேறுபாடான அர்த்தங்களை கொண்டுள்ளன. உதாரணத்திற்கு, பிரதான ஆசாரியன் பலிகளை செலுத்தினார் என்று வாசிக்கிறோம். நாமும் நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம். பலி செலுத்துதல் என்பதற்கும் ஜீவ பலியாக நம்மை ஒப்புக்கொடுக்கிறோம் என்பதற்கும் நாம் வித்தியாசத்தை காண்கிறோம். அவைகளை சமர்ப்பிப்பதைக் காட்டிலும் வேறு எதுவும் செய்ய முடியாது. இரண்டு வெள்ளாட்டுக்கடா கொண்டு வரப்பட்டு ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவில் கட்டப்படுவது அடையாளமாக காட்டப்படுகிறது. இந்த பொருளில் நாம் பலி செலுத்துகிறோம். அதாவது நமது சித்தத்தையும் அனைத்து உரிமைகளையும் விட்டுவிடுகிறோம். நம்மிடமிருந்து பலியை ஏற்றுக்கொள்ளும் காரியத்தில் பரலோக பிதாவானவர் மீட்பரின் மூலம் அல்லாமல் நம்மிடம் நேரடியாக தொடர்பு கொள்ளுவதில்லை. நமது மகா பரிகாரி நமது பலியுடன் அவரது பலியின் புண்ணியத்தை சாட்டுதல் பண்ண தயாராயிருந்தார். பிரதான ஆசாரியர், தேவனுடைய பிரதிநிதி அதை பலியிட்டார். நாம் நம்மை முன்னரே அர்ப்பணித்து விட்டோம். பிரதான ஆசாரியன் பலியை ஏற்றுக்கொண்டு மெய்யான வெள்ளாட்டுக் கடாவை கொல்ல ஆரம்பித்த போது நமது பலி நிறைவேறியது. ஆனால் இது படிப்படியான வேலை, நிழலில் பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக் கடாவை கொல்லும் போது உடனே பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் இரத்தமானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் வரை பலியானது உண்மையிலேயே நிறைவடையாது. உண்மைப் பொருளிலும் அது போல் தான்.

### அர்ப்பணத்தின் போது நமது வேலை நிறைவடையவில்லை

நமது கர்த்தர் சபையின் பலியின் வேலையை ஏதோ ஒரு வழியில் சுவிசேஷ யுகம் முழுவதிலும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலை நாம் பெற்ற பொழுது நாம் புது சிருஷ்டிகளானோம். இந்த உண்மையான மரணமும், "இடுக்கமான வழியில்" அனைத்து பாடுகளும், கர்த்தரின் வழிநடத்துதலில் தொடர்ந்து செல்லுதல் அனைத்தும் நமது பலியின் பாகங்களாகும். நமது சித்தத்தை பலியிடும் போது, வேறு சிந்தையை உபசரிக்கக்கூடாது. எனது பங்கை நாம் செய்துவிட்டேன். மீதியானவற்றை மகா பிரதான ஆசாரியர் செய்யட்டும்! இது சரியான எண்ணம் அல்ல. எந்த சமயத்திலும் நமது சித்தத்தை நிறுத்தி, நமது அர்ப்பணிப்பையும் நிறுத்திவிடுவோம். எந்த சமயத்திலும் நாம் உட்கார்ந்து "நாம் நிம்மதியாக இருப்போம்" என்று கூறலாம். நாம் அப்படி செய்யக்கூடாது. நாம் கிறிஸ்துவின் பாடுகளை பூர்த்தி செய்ய தொடரவேண்டும்.

நாம் அர்ப்பணம் பண்ணின போது எல்லாம் முடிந்து விடவில்லை. அப்பொழுது நமது விருப்பங்களையும் உரிமைகளையும் விட்டுவிட்டோம். உலகத்திற்கு மரித்து தேவனுக்கு ஜீவிக்கிற அந்த மகா பெரிய கிருபையின் ஒப்பந்தம் தேவைப்படுகிறது. "ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு செல்லப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே சுட்டெரிக்கப்படும்" என்று அப்போஸ்தலர் இது குறித்து கூறுகிறார். (எபிரேயர் 13:11) ஒரு பொருளில் ஆடானது மரித்துவிட்டது. நமது அனுபவங்கள், உண்மையான பாடுகளையும் பாளையத்துக்கு புறம்பே செல்வதையும் குறிக்கிறது. மாம்ச பிரகாரம் நாம் மரித்தவர்களாக எண்ணப்படும் போது இவை அனைத்தும் நமக்கு நேரிடுகிறது.

R4900

## GOD'S PROVIDENCE RE TWO QUEENS

## இரண்டு ராணிகளுக்கான தேவனுடைய அருள்

எஸ்தர் 4:1-5; 3

"கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுகிறார்." சங்கீதம் 145:20

"

இன்றைய பாடம் ராணி எஸ்தரைப் பற்றியது. அவள் ஒரு அழகான யூத பெண். அவளது அழகினிமித்தமாக, பெர்சியா ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு ராணியானாள். அவளது அழகினிமித்தமாக, நட்சத்திரம் என்று பொருள் கொள்ளக்கூடிய எஸ்தர் என்ற பெயரை பெற்றாள் என்று அனுமானிக்கப்பட்டது. இஸ்டார் என்பது வெள்ளி **(Venus)** கிரகத்தை குறிக்கும் கல்தேய வார்த்தை. ராஜாவினால் நீக்கப்பட்டு, விவாகரத்து பண்ணப்பட்ட வஸ்தி என்பவளுக்கு பிறகு எஸ்தர் ராணியானாள்.

இந்த இரண்டு ராணிகளின் எதிரான வழியில் நமக்கு இன்றைய நாளின் பெண்ணுரிமைப் பற்றிய ஒரு பாடத்தை நாம் கேட்கிறோம். ராஜா தனது ராஜ்யத்தின் பிரதானிகளுக்கு ஒரு விருந்து வைத்தான். அது ஒரு களியாட்டமாக இருந்தது என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த விருந்தின் உச்சக்கட்டத்தில் ராஜாவும் அவனது விருந்தினர்களும் மதுவின் செல்வாக்கின் கீழ் இருந்தனர். ராஜாவின் வேண்டுகோளை ராணி வஸ்தி அசட்டை பண்ணினதற்கு இது கூட காரணமாக இருக்கலாம். சந்தேகத்தின் பலனை ராணி வஸ்திக்கு கொடுக்கிறோம்.

அவள் தன் பெண்மையின் நீதியான உரிமையை உறுதிப்படுத்த, அவளது உரிமைகளுக்காக நின்றாள் என்று அநேகர் சொல்லுவார்கள். அனைத்து பெண்களுக்கும்

உரிமைகள் இருக்கின்றன. ராணி வஸ்தியும் அவளது உரிமைகளை பெற்றிருந்தாள். அவற்றை அவள் கையாண்டாள் என்பதில் நாம் விவாதம் செய்யவில்லை. உரிமைகள் என்பதில் கட்டாயப்படுத்துதல், பலவந்தப்படுத்துதல் என்ற திசையில் ராணி வஸ்தி வெற்றி கொண்டாள். ஆனால் அது அவளது அன்பானவனை இழக்கச் செய்தது.

இந்த பாடத்தில் பொருளாயிருக்கிற ராணி எஸ்தரின் செயல்முறையில் எதிரான மார்க்கம் பின்பற்றப்பட்டது என்பதை நாம் பார்க்கிறோம். முற்றிலும் எதிர்மாறான செயல்முறையால் ராணி சந்தோஷமான பலனை மாபெரும் வெற்றியை பெற்றாள். ஞானமுள்ள ஆண்களும் பெண்களும் எடுக்க வேண்டிய செயல்முறை என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

வஸ்தி இதைப் போல ஒரு மார்க்கத்தை தெரிந்தெடுத்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை. எனினும் ராஜா அவளை அங்கே வரச்சொன்னது அவளை கேலிப் பேச்சிற்கும் முரட்டுத்தனத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கும். அவள் தனது ஆற்றல், சாமார்த்தியம் மற்றும் பரிசுத்தத்தின் மேலும் மற்றும் அவளது கணவனின் அன்பு மற்றும் அக்கறையின்மேலும் நம்பிக்கை வைத்திருக்கலாம். அவள் அழைக்கப்பட்டிருக்கும் போது அவளது பிரசன்னம் இடையில் புகுதலாக இல்லாமல் புனிதமானதாக, நறுமணத்தைலமாக இருந்திருக்கும். அகந்தையை கண்டிப்பதாக இருந்திருக்காது. மற்ற அநேக நல்லெண்ணம் கொண்ட பெண்களை போல ராணி வஸ்தியும் ஞானமற்றவளாக இருந்தாள். அவள் கட்டளை பெற்று மறுத்த போது பரிசுத்தமான பெண்மையின் சக்திவாய்ந்த பாதுகாப்பை கைவிட்டாள். வஸ்தி ஒரு கிறிஸ்தவ பெண்ணோ, யூத பெண்ணோ அல்ல. ஆகையால் அவள் தெய்வீக அறிவுறுத்தலையோ அல்லது வழிகாட்டுதலையோ பெறவில்லை.

### எஸ்தர் வெற்றிக்காக குனிந்தாள்

ராணி எஸ்தர் உரிமை பெற்றவள் அல்ல. அவள் ராணி ஆகும்படி அழைக்கப்பட்ட போது அவள் மறுக்காமல் வஸ்தியின் நிலையிலேயே நிற்கும்படி பார்த்தாள். அவள் உரிமை பெறுதலை தெய்வீக கிருபையாக ஏற்றுக்கொண்டாள். அவள் எளிமையாக நல்ல சிறப்பான ஆடை அணிந்து கொண்டாள். முடிந்தவரை ராஜாவுக்கு ஏற்புடையவளாயிருக்கும்படி அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அந்த சமயத்தில் அவள் பதினைந்து வயதுடையவளாக இருந்தாள் என்று யூகிக்கப்படுகிறது. ராஜாவுக்கு பிரியமான ஆமான், அரண்மனை வாசலைக் காக்கிற மொர்தெகாய் என்ற யூதனை வெறுத்தான். ஏனெனில் மொர்தெகாய் மற்றவர்களைப் போல ஆமானை வணங்கி நமஸ்கரிப்பது இல்லை. மொர்தெகாய் மிகவும் விசுவாசமுள்ளவனாய் இருந்ததால் அவன் மேல் குற்றம் கண்டுபிடித்து ஆமானால் அவனை வேலையிலிருந்து நீக்கம் செய்ய முடியவில்லை. அவனது வெறுப்பு யூத இனம் முழுவதின் மேல் சென்றது. ராஜ்யத்தில் இருக்கிற யூதர்களை எதிரிகளாக பாவித்து அவர்களை கொல்லும்படி ராஜாவிடம் ஆமான் கட்டளை பெற்றுக்கொண்டான். இதில் அவன் கொல்ல விரும்பியது அவனது விசேஷித்த எதிரியாகிய மொர்தெகாயும் நிச்சயமாக உள்ளடங்குவான்.

அந்த ராஜா கட்டளையை நிறைவேற்ற நாள் நெருங்க நெருங்க மொர்தெகாயும் ராஜ்யம் முழுவதும் இருந்த அனைத்து யூதர்களும் துன்பத்திலும் பயத்திலும் இருந்தார்கள். எனினும் அவர்களது தேவன் அவர்களை விடுவிப்பார் என்கிற நம்பிக்கை இல்லாமலில்லை. இந்த காரியம் நமது பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ராணி எஸ்தர் மொர்தெகாய்க்கு ஒன்றுவிட்ட தங்கை. ஆனால் அவளது அப்பாவின் வயதுடையவனாயிருந்தான். உண்மையிலேயே அவள் அவனது வளர்ப்பு மகள். மொர்தெகாய் அவளிடம் அவளது செல்வாக்கை பயன்படுத்தி ராஜாவின் கட்டளையை ரத்து செய்யும்படி கேட்டுக்கொள்ளச் சொன்னான். அந்த காலக்கட்டத்தில் அவள் ஒரு மாத காலம் ராஜாவினால் அழைக்கப்படாதிருந்தாள். ஆதலால் அவள் கால தாமதம் செய்தாள்.

### அன்பும் அழகும் வெற்றி பெற்றது

மொர்தெகாய், காரியம் அவசரம் என்று ராணி எஸ்தருக்கு சொல்லி அனுப்பினான். அவள் தனது ஜனங்களுக்கு ஊழியம் செய்யும் சலுகையை இழக்க இருக்கிறாள் என்றும் தேவன் அவளை இந்த அளவுக்கு உயர்த்தியதற்கு காரணம் இந்த நேரத்தில அவளது யூத ஜனங்களுக்கு உதவி செய்யவே என்றும், இந்த சலுகையை அவள் பயன்படுத்த தவறினால் தேவன் தம்முடைய வாக்குத்தத்தின்படி யூதர்களுக்கு இரட்சிப்பு வேறொரு இடத்திலிருந்து வரும் என்றும் சொல்லி அனுப்பினான். இந்த முறையீடு போதுமானதாக இருந்தது. ராணி இன்னும் மூன்று நாட்கள் தாமதித்து, மொர்தெகாயையும் பட்டணத்தில் இருந்த மற்ற யூதர்களையும் அவளுடன் சேர்ந்து தேவனுக்கு முன்பாக உபவாசம் இருக்கச் சொல்ல கேட்டுக்கெண்டாள். இது தேவன் தம்முடைய ஜனங்களை விடுவிப்பதற்கான மன்றாட்டாகவும் எஸ்தர் தனது முயற்சியில் அவளது திறமையையும் சந்தர்ப்பத்தையும் ஞானமாக பயன்படுத்துவதற்காகவும் இருந்தது.

ராணி எஸ்தர் தனது உயிரை பணயம் வைத்து, ராஜாவிடம் இருந்து அழைப்பு இல்லாமல் ராஜ வஸ்திரத்துடன் அவனிடம் பிரவேசித்தாள். அவள் ராஜாவை வசீகரித்தாள். ராஜா தனது பொற் செங்கோலை நீட்டினான். அவள் அதைத் தொட்டாள். அவளிடம் ஒரு வேண்டுகோள் இருப்பதை அவன் உணர்ந்து அவளை பேசும்படி வலியுறுத்தினான். அவள் ராஜாவையும் அவனது பிரதான மந்திரியும் அவளது எதிரியுமாகிய ஆமானையும் அவள் ஏற்பாடு செய்யப்போகிற விருந்திற்கு வரச்சொல்லி கேட்டுக்கொண்டாள். அவள் விருந்திற்கு வந்தவுடன் அவளை சந்தோஷப்படுத்த அவன் அவளுக்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அவள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அவன் அவளை நேசிப்பது உண்மையானால் தன்னையும் தன் ஜனங்களாகிய யூதர்களையும் கொல்வதற்கு கட்டளை கொடுப்பீரா என்று பதிலளித்தாள்.

அவளது வழக்கு வென்றது. ஆமான் அநீதியான ஒரு

கட்டளையை அனுப்பச் சொன்னான் என்பதை ராஜா உணர்ந்தான். பெர்சியா ராஜா ஒரு கட்டளையை பிறப்பித்தால் அதை மாற்றக்கூடாது என்ற தவறான வரைமுறை இருந்தது. ராஜா இன்னொரு கட்டளையை பிறப்பித்து, ஆமான் மேல் கோபங்கொண்டு அவனை மரத்தில் தூக்கிப்போடவும், யூதர்கள் தங்கள் ஜீவனை காத்துக்கொள்ள, தங்களது எதிரிகளை கொல்லவும் அவர்களது உடைமைகளை கொள்ளையிடவும் யூதருக்கு கட்டளையிட்டதாக சகல தேசங்களுக்கும் எழுதி அனுப்பினான்.

R4901

# JUSTIFICATION BY FAITH
# விசுவாசத்தினால் நீதிமானாகுதல்

ரோமர் 5:1இல் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." நமது சமாதானம் அல்லது தேவனுடனான நல்லிணக்கம் நமது விசுவாசத்துடன் ஆரம்பித்து இந்த கிருபையின் நிலைமைக்கு வழிநடத்துகிறது. இதில் நாம் தேவனுடைய குமாரர்களாக நின்று, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு ராஜ்யத்தின் மகிமை, கனம் மற்றும் சாகாமையின் நம்பிக்கையில் களிகூருகிறோம். விசுவாசத்தினால் நமது நீதிமானாகுதல் நமது விசுவாசத்தின் முதல் பகுதியிலேயே ஆரம்பித்தது. அதாவது கர்த்தரை நாம் அபூரணராக இருந்து முதலில் பார்த்த போதேயாகும்.

நாம் தேவனை முதலில் அணுகியதிலிருந்து ஓரளவு சமாதானத்தை நாம் பெற ஆரம்பிக்கிறோம். நாம் சரியான திசையில் நடந்து அறிவிலும் கீழ்ப்படிதலிலும் வளருகிற வரையில் இது தொடரும். யாருடைய விசுவாசமோ அல்லது கீழ்ப்படிதலோ நின்றால் அவர்கள் தேவனுடனான சமாதானம் குறைவதை காண்கிறார்கள். விசுவாசமும் கீழ்ப்படிதலும் முழு அர்ப்பணம் மற்றும் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தல் நிலைக்கு பெருகினால், "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" நமது இருதயங்களை ஆளுகிற நிலைமைக்கு வருகிறது. (பிலிப்பியர் 4:7) இந்த வசனம் பரிசுத்த ஆவியினால் வழங்கப்பட்ட பூரண சமாதானத்தை குறிப்பிடுகிறது. தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணத்தின் பலனால் இது கிடைக்கிறது.

விசுவாசமும் கீழ்ப்படிதலும் நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க விரும்புகிற நிலைக்கு அபிவிருத்தி அடைந்த பிறகு நாம் இந்த முழுமையான ஆசீர்வாதத்துக்குள் நுழைந்தோம். அதில் நாம் இப்பொழுது நிலைத்திருக்கிறோம். நுழைவதற்கு முதலாவது நமது விசுவாசம் மகா பிரதான ஆசாரியனால் உயிரூட்டப்பட வேண்டும். அவர் நம்மை பூரணராக்க தேவையான அளவுக்கு அவரது பலியின் புண்ணியத்தை நமக்கு சாட்டுகிறார். இரண்டாவதாக நாம் பலிகளாக நமது பரம பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவரது ஏற்றுக் கொள்ளுதலை புதிதான ஜீவனுக்கு நம்மை பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலினால் குறிப்பிடுகிறார்.

இந்த உயிரூட்டுதலானது நீதிமானாக்குதலை நிறைவு செய்து அதை மாற்ற முடியாததாக்குகிறது. நீதிமானாக்குதலை உயிரூட்டம் பெற்றவன் கிறிஸ்துவின் புண்ணியத்தின் முழு பங்கையும் பெற்றிருக்கிறான். அவன் மாபெரும் பாவ நிவாரணத்தில் விருப்பம் இல்லாதிருந்து பின்வாங்கினால் அவன் கற்பாறையில் விதைக்கப்பட்டது போல் இருப்பான். அவன் புது சிருஷ்டியாக பூரணமடைவதில் தோல்வியுற்றால், "நியாயத்தீர்ப்பு வருமென்ற பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்." (எபிரேயர் 10:27)

ஆனால் அவரைப் பற்றிய உணர்வு இருந்து தேவனுடன் இணக்கமாக இல்லாதவனை ஒரு விளக்கத்தின் மூலம் கவனிக்கலாம். ஆசாரிப்புக் கூடாரத்தில் குறிப்பிடப்பட்டது போல அவன் தெய்வீக பிரசன்னத்தை உணர்கிறான். அவன் தேவனிடம் இழுக்கப்படுகிறான். அவன் ஆசரிப்புக் கூடாரத்தை நெருங்கும் போது பாளையத்திலிருந்து பிரகாரத்திற்கு போகக்கூடிய வாசலை மட்டுமே பார்க்கிறான். அந்த வாசலை கடந்த பிறகு இரட்சகரின் சிறப்பான பலியை குறிப்பிடுகிற பலிபீடத்தை பற்றிக் கொள்ளுகிறான். பலிபீடத்தை கடப்பது மீட்பின் வேலையில் விசுவாசத்தை குறிக்கிறது. "பிரகாரத்தில்" நுழைந்ததிலிருந்து அவனது விசுவாச நிலைமை, கீழ்ப்படிதலின் முன்னேற்ற படிகளுடன் தொடர்ந்து அபிவிருத்தி அடைகிறது. அடுத்தது முதலாவது திரை தெரிகிறது. இது மரண பரியந்தமான அர்ப்பணத்தைக் குறிக்கிறது. முதலாம் திரையின் கீழ் நுழைவது முழுமையான அர்ப்பணமாகிறது. அதன் பலன் முழுமையான அல்லது பூரண சமாதானம். இது குறித்து நமது கர்த்தர் குறிப்பிடுவதாவது: "என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன்." (யோவான் 14:27)

அவனது விசுவாசமானது இரட்சகரின் வேலையில் இனி வெறும் விசுவாசமாக இருக்காது. அதைவிட மேலானதாக இருக்கும். அது "தேவனுடைய அன்பின் ஈவாகிய சமாதானமாக," பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலாக ஆகியிருக்கும். அது இருதயங்களை காத்துக்கொள்ளக் கூடிய எல்லாப் புத்திக்கும் மேலானதாக இருக்கும். முதலாம் திரையை கடந்த பிறகு, காண்பது பூமிக்குரிய சகல ஆசாபாசங்களை பலி செலுத்துவதைக் குறிக்கிறது. இந்த அடுத்த படியை எடுக்கவில்லை என்றால் சமாதானம் குறைய ஆரம்பிக்கும். மேலும் வாசலை நோக்கி, உலகத்தை நோக்கி பிற்போக்கான இயக்கமாக இருக்கும். இப்போது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரர்களின் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கும் உள்ள வித்தியாசம்: பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் அவர்களது விசுவாசம் உயிரூட்டப்பட முடியாத காலத்தில் வாழ்ந்தார்கள். எனவே, அவர்களது விசுவாசம் தெய்வீக அங்கீகாரத்தையும், அவர்கள் அனுபவித்த அறிவுக்கேற்றபடி நல்ல எதிர்கால நம்பிக்கையையும் பெறுவதைத் தவிர வேறு எதையும் பெற இயலாது. இரட்சகர் மூலமாக அல்லாமல் நித்திய ஜீவனை பெற இயலாது. எனவே அவர்கள் நித்திய ஜீவனின் வாக்குத்தத்தத்தை மட்டுமே பெற்றார்கள். இரட்சகர் தமது பலியின் புண்ணியத்தை உலகத்திற்கு பயன்படுத்தும் போது தான் அவர்கள் முழுமையான நீதிமானாக்குதலை பெறுவார்கள்.

சுவிசேஷ யுக காலத்தில் காரியங்கள் வேறாக

இருக்கின்றன. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் தங்களது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். இந்த "அனுக்கிரக காலத்தில்" அப்படிச் செய்கிறவர்கள் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவார்கள். அவர்கள் பூமிக்குரியவைகளிலிருந்து நீக்கப்பட்டு, ஆவிக்குரிய தளத்தில் கர்த்தருடன் பரலோக வகுப்பாருடன் அவர்களது வெகுமதியை பெறுவார்கள்.

R4901

# MENE, TEKEL, UPHARSIN

# மெனே, தெக்கேல், உபார்சின்

தானியேல் 5

"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்." பிரசங்கி 12:14

தகுந்த தண்டனையை அளிக்கும் சட்டம் கிரியை நடப்பிக்கிறது. நல்ல சிந்தனைகள், நல்ல வார்த்தைகள் மற்றும் நல்ல கிரியைகள் சீக்கிரத்திலோ அல்லது பின்னரோ நல்ல பலன்களை நிச்சயமாகக் கொண்டு வரும். தீய சிந்தனைகள், தீய வார்த்தைகள், தீய கிரியைகள் சீக்கிரத்திலோ அல்லது பின்னரோ தீய விளைவுகளை நிச்சயமாக கொண்டு வரும். தெய்வீக சட்டம் உலகில் நல்ல செயல்களுக்கு வெகுமதியையும் தீயசெயல்களுக்கு தண்டனையையும் அளித்து, விதிவிலக்கானவர்களை காப்பாற்றுகிறது. இப்பொழுது யூதர்களிடமும் கிறிஸ்தவர்களிடமும் மட்டுமே கிரியை செய்கிறது. ஏனெனில் யூதர்களும் உண்மையான கிறிஸ்தவர்களும் மட்டுமே தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிறார்கள். "உலகமானது பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" என்று அப்போஸ்தலர் அறிவிப்பது உண்மை. "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவிசுவாசிகளின் மனதை குருடாக்கியிருக்கிறான்." "குருடரின் கண்கள் திறக்கப்பட்டு செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" என்ற வாக்குத்தத்தத்திற்கான காலம் இன்னும் வரவில்லை. (ஏசாயா 35:5) எனினும் தேவன் உலகத்தின் காரியங்களில் ஒரு பொதுவான வழியில் தீமையை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு போய்விடாதபடி கட்டுப்படுத்தி வருகிறார்; அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிற யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு உண்மையான காயம் ஏற்படாதவாறும் கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறார்.

சோதோம், கொமோரா, நினிவே, நேபுகாத் நேச்சார் மற்றும் நமது இன்றைய பாடம், தேவனுடன் உடன்படிக்கை பண்ணினவர்களுடன் விதிவிலக்காக தொடர்பு கொண்டு வருகிறதைக் கூறுகின்றன. இன்றைய பாடமானது பெல்ஷாத்சாரின் ராஜ்யத்தின் வீழ்கையானது வெறும் அதன் மேலான நியாயத்தீர்ப்பை மட்டும் கூறாமல், மெய்யான கோரேஸின் கைகளில் மெய்யான பாபிலோனின் வீழ்கையை மாபெரும் அடையாளமாக காண்பிக்கிறது.

பாபிலோனின் ராஜா, தனது தலைநகரின் முன்னூற்றி ஐம்பது அடி உயரமான கோட்டை சுவரின் மீது மிகுந்த பாதுகாப்பை உணர்ந்தவனாய் தனது பிரதானிகள் மற்றும் தளபதிகளுடன் சந்தோஷமாக இருந்தான். அவன் கடந்தகால வெற்றிகளை நினைவுகூர்ந்தான். அவன் சாலொமோன் தேவாலயத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொற்பாத்திரங்களை அந்த சமயத்தில் கொண்டு வந்தான். அவை யூதர்களை ஜெயங்கொண்டதால் அதாவது யூதர்களின் தேவனை யேகோவாவை ஜெயங்கொண்டதால் கிடைத்ததாக கருதப்பட்டது.

விருந்தின் மத்தியில் பிரமுகர்கள் கூடியிருக்கும் போது ஒரு பெரிய திகிலான காரியம் நடந்தது. மனித கையுறுப்பு விருந்து அறையின் சுவற்றில் எழுதினதாவது: "மெனே, தெக்கேல், உபார்சின்." ஞானிகளும் ஜோதிடர்களும் அதன் பொருளை அறியக்கூடாமற் போயிற்று. தானியேலை நினைவுகூர்ந்து அவருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. அவர் அந்த எழுத்துக்களை வாசித்தது மாத்திரமல்ல, அதன் அர்த்தத்தையும் கூறினார். அந்த வார்த்தைகள் கல்தேய மொழியில் இருந்தும் கூட ஞானிகளால் அறியக்கூடாதபடி எழுதப்பட்டிருந்தது. அதன் அர்த்தத்தை கூறினதற்காக ராஜா கொடுத்த வெகுமதிகளையும் கனத்தையும் தானியேல் பெற்றுக்கொள்ள மறுத்தார்; அந்த ராஜா "தராசில் நிறுக்கப்பட்டு, குறைய காணப்பட்டான்" என்பது அந்த எழுத்துக்களின் பொருள் என்று கூறினார். பாபிலோனிய ராஜ்யம் மானிடரின் அக்கறையில் முன்னேறுவதற்கு பதிலாக, ஆதி கொள்கையிலிருந்து பின் வாங்கியது. மேதோபெர்சியா என்கிற வேறொரு தேசத்திற்கு ராஜ்யபாரம் கொடுக்கப்பட்டது. பின்னர் கிரேக்கர்களுக்கு உலக சாம்ராஜ்யம் கொடுக்கப்பட்டது. அதற்கு பின்னர் ரோமர்களுக்கு கொடுக்கபட்டது. முடிவாக தேவன், "புனித ரோம ராஜ்யம்" அல்லது கிறிஸ்துவின் ஆளுகை என்று அழைக்கப்பட்டதை அனுமதித்தார். இவைகளில் ஒவ்வொன்றும் தனது இயலாமையை நிரூபித்திருக்கின்றது; மேசியாவின் மெய்யான ஆளுகையின் போது ஏராளமாக நிறைந்திருக்கும் என்று தேவன் ஆசீர்வாதங்களையும், "சகல ஜனங்களாலும் விரும்பப்படுகிறதாக" ஆகக்கூடிய மானிட உயர்வையும் ஆசீர்வாதங்களையும் உலகிற்கு கொண்டு வர இயலாமையை நிரூபித்திருக்கிறது.

### ஒவ்வொரு மனிதரின் கிரியையும் சோதிக்கப்பட வேண்டும்

யூதர்களும் கிறிஸ்தவர்களும் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருப்பதால் அவர்கள் இப்பொழுது பரீட்சையில், நியாயத்தீர்ப்பில் இருக்கிறார்கள் என்று நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். இது யூதர்களிடம் மீண்டும் மீண்டுமான தேவனுடைய அறிவிப்பாக இருந்திருக்கிறது. தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லாதவர்கள் குறைபாடுகளுக்காக தண்டிக்கப்படுவது போல இவர்கள் குறைபாடுகளுக்காக தண்டிக்கப்படாமல்,

அவர்களது தண்டனைகளும் அடிகளும் முடிவாக அவர்களது ஆசீர்வாதங்களுக்கு ஏதுவாக நோக்கங்கொண்டவை. யூதர்களுக்கு வந்திருக்கிற துன்பங்கள், தேவன் திட்டமிட்டது போல் அவர்கள் பிரிக்கப்பட்ட மற்றும் தனித்துவமான ஜனங்களாக இல்லாதிருப்பதினாலேயாகும். எனவே அவர் மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான ஆசீர்வாதங்களில் முதலில் பங்கு பெறுகிறவர்களாவும் பெற்றுக்கொள்கிற ஜனங்களாகவும் இருக்கமாட்டார்கள். அவர்களது பிரமாணங்களுக்கு விசுவாசத்தையும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையையும் அவர்கள் பராமரிக்கிற அளவுக்குத்தக்கதாக, இந்த மாபெரும் வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்கு தயாராக இருப்பார்கள். இவைகள் இன்னும் அவர்களுடையதாக, மறுசீரமைப்பு முதலான பூமிக்குரிய வாக்குத்தத்தங்களாக இருக்கின்றன. (அப்போஸ்தலர் 3:19-23; ஏசாயா 35)

யூதர்களுக்கான தேவனுடைய வாக்குத்தத்தமானது பூமிக்குரிய ராஜ்யத்திற்கும் அதன் ஆசீர்வாதத்துக்குமானது உடன்படிக்கை பண்ணின கிறிஸ்தவர்களுக்கானதும் ஆவிக்குரியதும் பரத்திற்குரியதுமாக இருக்கிறது. இவர்கள் தேவனுடைய அழைப்புக்கு பதிலளிக்கிறார்கள். "பலியினாலே என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்று கர்த்தர் கூறுகிறார். (சங்கீதம் 50:5) பூமிக்குரியவைகளை பலியிடுகிற அந்த உடன்படிக்கையானது பரத்துகுரியவைகளை வெகுமதியாக பெற்றுக்கொள்ளும். அவர்களது பலியின் உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாக இருப்பதற்கு ஏற்ப ஆவியின் பிரகாரம் புத்துணர்ச்சியூட்டப்பட்டு, சித்தத்திலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் தேவனைப் பற்றிய விசுவாசம் மற்றும் வேலைகளிலும் பலப்படுத்தப்படுவார்கள். முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமையாக அடையப்பெறுகிற ஆவி மற்றும் கிருபையின் அந்த ஐசுவரியங்கள் இப்பொழுது அடிக்கடி வறுமை மற்றும் பூமிக்குரிய துயரங்களோடு இணைந்திருக்கிறது. பூமிக்குரியவைகளை பலி கொடுக்கிறவர்கள் மட்டும் பரத்திற்குரியவைகளை அடைவர்கள். ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுப்போமாக. "தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாரும் துன்பப்படுவார்கள்." "நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குதருவேன்." (2தீமோத்தேயு 3:12; வெளிப்படுத்தல் 2:10)

### விதைத்ததையே அனைவரும் அறுப்பார்கள்

மேசியாவின் நீதியான ஆயிரம் வருட அரசாட்சியில் உலகமானது கையாளப்பட்டு அதன் நியாயத்தீர்ப்பு, அதன் பரீட்சை மற்றும் மாறும் நிலைக்கு கொண்டு வரப்படும். ஆனால் அது சகல மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படுகிற தேவனிடத்தில் உள்ள விசுவாசத்திற்கான ஒரு நியாயமான நீதியான சோதனையாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தின் பலனானது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற சோதனை கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட மாபெரும் இரட்சிப்பின் வேலையின் பலனாக இருக்கும். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்" தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். (1தீமோத்தேயு 2:4) அந்த மகிமையான யுகத்தில் சாத்தான் கட்டப்பட்டு, பாவம் மற்றும் மரணத்தின் கட்டுகள் உடைக்கப்படும். தகப்பனாகிய ஆதாம் பரிபூரணத்தில் இருந்த போது அனுபவித்த ஆசீர்வாதமான நிலைமைகள் மற்றும் கிருபைகளுக்கு திரும்புவதற்கான முழுமையான சந்தர்ப்பம் அனைவருக்கும் கொடுக்கப்படும். இந்த கிருபையை மறுப்பவர்கள் எந்தவித பரிகாரமும் இல்லாமல் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

ஆனால் நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற உலகத்திற்கான உண்மையான சோதனை எதிர்காலத்திற்குரியதாக இருக்கிறது. இப்பொழுது செய்யப்பட்ட ஒவ்வொரு நன்மையான செயலுக்கும் தீமையான செயலுக்கும் அப்பொழுது பலன் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு நல்ல செயலும் ஒவ்வொரு நல்ல எண்ணமும் ஒவ்வொரு நல்ல வார்த்தையும் குணலட்சணத்தில் அதன் உயர்வையும் செல்வாக்கையும் பெற்றிருக்கும். ஒவ்வொரு தீமையான வார்த்தையும் எண்ணமும், செயலும் குணலட்சணத்தில் காயமான விளைவுகளை பெற்றிருக்கும். கர்த்தருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான் ஒருவருக்கு செய்யப்பட்ட ஒவ்வொரு இரக்கமான காரியத்திற்கும் வெகுமதியளிக்கப்படும். இவர்களில் சிறியவர்களில் ஒருவனுக்கு செய்யப்படுகிற ஒவ்வொரு தீமையான செயலும் நிச்சயமாக தண்டனையை பெறும்.

இப்படியாக உலக மனுக்குலம் இப்பொழுது வைத்திருப்பது அவர்களது நித்திய ஜீவனுக்கு உதவிகரமாகவோ அல்லது தடைகளாகவோ இருக்கும். மரியாதைக்குரியவர்கள் மற்றும் நேர்மையானவர்கள் கிறிஸ்தவர்களாகவோ அல்லது பரிசுத்தவன்களாகவோ ஆகாவிட்டாலும் அவர்கள் எதிர்கால சோதனை காலத்தில் அதற்கேற்றாற்போல் நல்ல நிலையை பெற்றிருப்பார்கள். மதிப்பற்றவர்கள் எதிர்காலத்தில் அதற்கேற்ற சீரழிவைப் பெறுவார்கள். இரட்சகர் மற்றும் மகிமையடைந்த சபையினால் அவர்கள் பாவம், சீரழிவு மற்றும் மரணத்திலிருந்து வெளியே வர அதற்கேற்ற அதிகமான அடிகள் தேவைப்படும். (1கொரிந்தியர் 6:2)

R4902

# THE NEW COVENANT
# புது உடன்படிக்கை

"அவர்கள் ஆதாமைப் போல உடன்படிக்கையை மீறினார்கள்." ஓசியா 6:7

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட பிறகு, அவருடன் அவரது கீழ்ப்படிதலினால் நித்திய ஜீவனை பெற்றிருக்கும்படியான ஒரு உடன்படிக்கைக்குள் தேவன் நுழைந்திருக்கக்கூடும். ஆதாம் தோல்வியடைந்தார். அதனிமித்தம் உடன்படிக்கை முறிக்கப்பட்டது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு மாற்றம் அடைந்தது. தேவன் மனிதனுக்கு ஜீவனையும் அவனது சந்தோஷத்தையும் அதன்பிறகு நீடித்து வைக்கவில்லை. ஆனால் மரண தண்டனை மனுக்குலம் முழுவதற்கும் கொடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் பூமியானது வளர்ச்சியடையாத நிலைமையில் இருந்ததால், எல்லாமே மனிதனுடைய மரணத்திற்கு சாதகமாகவும் ஜீவிப்பதற்கு தகுதியற்றதாகவும் இருந்தது. எனினும் தேவன் மனுக்குலத்தின் மேல் மனதுருக்கம் வைப்பதாக அறிவித்தார்; சில காலத்திற்கு பிறகு ஆசீர்வாதத்தை அருளுவேன் என்றும்

அறிவித்தார். இந்த வாக்குத்தத்தம் அவரது நல்லிணக்கத்தை குறித்தது, பின்னர் தேவன் ஆபிரகாமுக்கு ஒரு சிறப்பு வாக்குத்தத்தத்தை கொடுத்தார். "பூமியிலுள்ள சகல வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 12:3) இந்த காலக்கட்டத்தில் தேவன் ஒரு திட்டத்தை கொண்டிருந்தார். இப்பொழுது அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். தெய்வீக நீதியை சரிக்கட்ட தமது ஜீவனை பலிகொடுக்கக்கூடிய மாபெரும் மத்தியஸ்தர் மூலமாக ஒரு புதிய உடன்படிக்கையை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்டாக்குவதே அந்த திட்டமாகும்.

மகா மத்தியஸ்தரை அபிவிருத்தி செய்யக்கூடிய நேரம் இன்னும் வரவில்லை. தேவன் ஒரு நிழலான ஏற்பாட்டை இஸ்ரயேல் தேசத்துடன் செய்தார். இஸ்ரயேல் தேசமானது உலகத்தை குறிக்கும்படியாக செய்யப்பட்டது. மோசே உலகத்தின் மத்தியஸ்தரை குறிக்கும்படி செய்யப்பட்டது. சீனாய் மலையில், தேவன் இஸ்ரயேலருடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்தார். ஆனால் நேரடியாக அல்ல, ஆனால் நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராகிய மோசே மூலம் செய்தார். இஸ்ரயேலர் பிரமாணத்தைக் கடைபிடித்தால், தேவன் அவர்களுக்கு ஜீவனை கொடுக்க வேண்டியவராயிருந்தார். (யாத்திராகமம் 19:3-9) தெய்வீக பிரமாணத்தைக் கடைபிடித்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளக்கூடிய இடத்திற்கு ஜனங்களை கொண்டுவரக் கூடிய மத்தியஸ்தராக, ஆலோசனைக்காரராக மற்றும் கற்பிப்பவராக மோசே இருந்தார். ஏற்ற காலத்தில் நியாயப்பிரமாணமானது யாருக்கும் நித்திய ஜீவனை கொடுக்கவில்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டது. தேவன் என்ன செய்வார்? அங்கே குழப்பம் இருந்தது.

"ஏற்ற காலத்தில்" தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ஆதாமின் இனத்தில் இரட்சகராக அனுப்பினார். ஏற்ற காலத்தில் தேவனுடைய குமாரனாகிய இயேசு இரட்சகராக ஆகி, உலகத்திற்கு மீட்கும் விலைக்கிரயத்தைக் கொடுத்து, இரட்சிப்பின் வேலையை ஆரம்பித்தார். மானிட இயேசுவினால் உலகத்தை இரட்சித்து, சீரமைக்க இயலவில்லை. ஏனெனில் மீட்பின் கிரயத்தை கொடுக்க மனிதனாக அவரது மரணம் தேவைப்படுகிறது. ஆகையால் அவரது முதல் வேலை மீட்கும் பொருளின் விலைக்கிரயமாக அவரது ஜீவனை கொடுப்பதாக இருந்தது. அதை அவர் தெய்வீக நீதியின் கைகளில் கொடுக்க வேண்டியிருந்தது. தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக, பிதாவானவர் அவரை புது சுபாவத்தில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பினார். அவரது மீட்கும் பொருளின் விலைகிரயம் அவரது கணக்கில் இன்னமும் இருக்கிறது.

சுவிசேஷ யுகத்தில் அவரது பலியின் புண்ணியத்தை, சபையானது அவருடன் பலியின் உடன்படிக்கையில் இணைவதற்கு சாட்டுதல் பண்ணியிருக்கிறார். இதற்கு இசைவாக வேதவாக்கியம் கூறுகிறதாவது: "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." (சங்கீதம் 50:5) கிறிஸ்துவின் பலியும் அவரது அங்கங்களின் பலியும் நிழலில் இஸ்ரயேலர்களின் பலியைக் காட்டிலும் "விசேஷித்த பலிகளை" அமைக்கிறது. இந்த "விசேஷித்த பலிகள் யோர்தானில் நமது ஆண்டவரின் அனுபவங்களில் ஆரம்பித்து அவரது சரீரத்தின் கடைசி அங்கம் அவரது பாடுகளில் பங்கு பெற்று, உயிர்த்தெழுதலில் அவரது மகிமையில் பங்கு பெறும் காலம் வரை தொடரும்."

### முழுமையடைந்த மத்தியஸ்தர் புது உடன்படிக்கையை தொடங்குவார்

நமது கர்த்தரும் அவரது அங்கங்களும் அடங்கிய மாபெரும் மத்தியஸ்தர் முழுமையடைந்த அந்த நேரத்தில் புது உடன்படிக்கையை ஆரம்பிக்க தயாராயிருப்பார்கள். அது எரேமியா தீர்க்கதரிசி மூலம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியது. (எரேமியா 31:31) தேவன் ஆபிரகாமுக்கு சொன்ன பிரகாரம் இந்த புது உடன்படிக்கை பூமியின் சகல வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதியாகமம் 12:3) இந்த புது உடன்படிக்கை இஸ்ரயேலரோடு ஏற்படுத்தப்படும் என்பதே வாக்குத்தத்தம். ஆகையால் இந்த உடன்படிக்கையை பயன்படுத்திக்கொள்ள மற்ற எல்லா தேசத்தாரும் ஜனங்களும் இஸ்ரயேலின் ஒரு பகுதியாக ஆக கடமைப்பட்டிருப்பார்கள். இப்படியாக இறுதியில் ஆபிரகாம் எல்லா வம்சங்களுக்கும் பிதாவாக ஆவார். தேவனுடன் நல்லிணக்கத்துக்கு வருகிறவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பார்கள். அதாவது அவர்கள் ஆபிரகாம் பெற்றிருந்த விசுவாசத்தை அடைந்திருப்பார்கள். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இரண்டும் அவசியம். புதிய உடன்படிக்கை முத்திரை போடப்பட்ட பின்பு செயல்பாட்டுக்கு வரும். பிறகு கிறிஸ்து (சபையும் இயேசுவும்) புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நிற்பார்.

இந்த உடன்படிக்கை நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் போல் இருக்கும். நிழலாக இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையை விட இது சிறந்ததாகவும், உயர்ந்ததாகவும் இருக்கும். அப்பொழுது தேவன் இஸ்ரயேலரோடு நேரடியாக தொடர்பு கொள்ளாமல் மத்தியஸ்தர் மூலம் தொடர்பு கொள்ளுவார். முதலாவதாக பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் முழுவதுமாக ஏற்றுக்கெள்ளப்பட்டு, அவர்கள் மத்தியஸ்தரை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுவார்கள். மேலும் புது உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுவார்கள். அவர்கள் பூரணராக இருப்பதால் அதின் நிபந்தனைகளுக்கு இணங்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் மரித்தோரிலிருந்து பூரண மானிடர்களாக எழுப்பப்படுவதால், மாம்சீக பலவீனம் அவர்களிடம் இருக்காது. மத்தியஸ்த ஆளுகையின் காலத்தில் மத்தியஸ்தர், தேவனுடன் நல்லிணக்கத்திற்கு வருகிற அனைவருக்கும் உதவுவதற்கு தயாராக நிற்பார். தேவனுடன் தொடர்பு கொள்ளுவதற்கு யாரும் உடனே கொண்டு வரப்படமாட்டார்கள். எனினும் ஆயிரம் வருட யுகம் முடியும் வரை மத்தியஸ்தருடன் தொடர்பு கொள்ளுவார்கள். பிறகு அவர்கள் பிதாவானவரிடத்தில் திரும்புவார்கள். மேசியாவின் யுகத்தில் மத்தியஸ்தரின் ஏற்பாடுகளுக்கும் பிதாவானவரின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்பட்டிருப்பார்கள். படிப்படியாக அதன் பலன் மாம்சமான யாவரிடம் இருந்தும் கல்லான இருதயம் நீக்கப்பட்டு, மனுக்குலம் முழுவதும் இழந்து போன மனதின் பிரகாரமான, சரீரப் பிரகாரமான, ஒழுக்க பிரகாரமான

பூரணத்திற்கு திரும்புவார்கள். இந்த ஆசீர்வாதத்தில் பங்கு பெற மறுப்பவர்கள் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:22,23) தொடர்ந்து முன்னேறுபவர்கள், இருதயத்திலும் சிந்தையிலும் சரீரத்திலும் தேவன் எதிர்பார்க்கிற பூரண நிலைமையை அடைவார்கள்.

**மனுக்குலமானது பூரணத்தை திரும்பப் பெறும்**

மத்தியஸ்தரின் ஆளுகையின் முடிவில் மனுக்குலம் அனைத்தும் ஆயிரம் வருட யுகத்தின் அனுபவங்களின் மூலம் பலன் பெற தயாராயிருப்பார்கள். அவர்கள் தேவனிடத்திற்கு, தெய்வீக நீதியினிடத்திறகு திரும்புவார்கள். அப்பொழுது ஆதாம், அவர் விழுந்து போவதற்கு முன் இருந்த அதே தளத்தில் அவர்கள் இருப்பார்கள். அவர்கள் தேவனுடனான இந்த உடன்படிக்கையின் உறவை பராமரிப்பது அவர்களுக்கானது. ஆதாம் செய்தது போல, அவர்கள் தோல்வியடைந்தால் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். ஆனால் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் நித்திய ஜீவனுக்கு செல்வார்கள். தேவன் சாத்தானை கொஞ்ச காலம் விடுவிப்பார்; யார் சாத்தானின் வசீகரத்துக்கு இடங்கொடுப்பார்கள் என்பதை சோதிப்பார். (வெளிப்படுத்தல் 20:7-9)எல்லா சோதனைகளிலும் நிற்கக்கூடியவர்களும், சோதனையின் வல்லமைக்கு மேலாக அவரிடத்தில் விசுவாசமுடையவர்களும் நித்திய ஜீவனை பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

புது உடன்படிக்கையின் தொடக்கம் இயேசு உலகத்திற்கு வந்த போது ஆரம்பித்து இன்னும் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். இந்த ஆயத்தப்படுத்தப்படுபவைளாவன: முதலாவது ஆசாரியத்துவத்தை அபிவிருத்தி செய்தல், தலையும் சரீரமும், பிரதான ஆசாரியன் மற்றும் உதவி ஆசாரியர்கள்; இரண்டாவது "விசேஷித்த பலிகளை" செலுத்துவது, புது உடன்படிக்கை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. தேவன் அவர்களை தம்மிடத்தில் ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் மனதுருக்கத்துடனும் இரக்கத்துடனும் செயல்பட்டால், ஜனங்கள் ஆசீர்வாதத்தை பெற இருக்கிறார்கள். இப்படியாக நாம் முழு சித்திரத்தையும் பெற்றிருக்கிறோம். பூரணமாக இருக்கிறவர்களைத் தவிர வேறு யாரையும் அவர் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர் தற்போது சபை பூரணமாக இருப்பதாக கருதி தொடர்பு கொள்கிறார். அவர்களது அபூரணம் அவர்களது பரிகாரியால் மூடப்படுகிறது. மேலும் அவர்கள் ராஜரீக ஆசாரியர்களாக, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக அவர்களது நிற்குதலைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆயிரம் வருட யுக ஆரம்பத்தில் புது உடன்படிக்கை முழுமையாக செயல்பட ஆரம்பிக்கும் என்றும் அந்த யுகம் முழுவதும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்றும் நாம் புரிந்து கொள்கிறோம். இந்த புது உடன்படிக்கைக்கு கீழாக, கர்த்தர் பாவத்தையும் மனுக்குலத்தில் கல்லான இருதயத்தையும் நீக்கிப்போடுவார். (எசேக்கியேல் 36:26,27) மத்தியஸ்தர் ஈடுபடும் வரை புது உடன்படிக்கை தேவனுக்கும் மனிதருக்கும் இடையே தனிப்பட்டதாக ஆகாது. (1கொரிந்தியர் 15:24) அவர் செயல்பட ஆரம்பித்த பிறகு, ஆதாமுடன் இருந்தது போல தேவனுடனான உடன்படிக்கையின் உறவு ஸ்தாபிக்கப்படும். தெய்வீக பிரமாணத்திற்கு தொடர்ந்து கீழ்ப்படிகிற அனைவருக்கும் தேவன் நித்திய ஜீவனை உத்திரவாதம் அளிப்பார்.

R4906

## WAS JUDAS A HYPOCRITE?
## யூதாஸ் ஒரு மாயக்காரனா?

ஓர் உயர்ந்த மனம் கொண்டவர்கள் நீதியான கோப உணர்வு இல்லாமல் யூதாசின் காரியங்களை ஆழ்ந்து படிப்பது கஷ்டமானதாக இருக்கும். அடிப்படை குணலட்சணத்தின் இழிநிலையே ஒரு வெறுப்பே இயேசுவை மேசியா என்று உறுதியாக நம்பினாரோ இல்லையோ உன்னதமானவராக அறியப்பட்டவரை, இப்படியாக முப்பது வெள்ளிக்காசுக்காக காட்டிக்கொடுத்தது. அக்கிரமத்தின் இந்த ஆழத்திற்கு யூதாஸ் உடனே சென்றிருக்கமாட்டான் என்று யூகிப்பது தவறானதாக இருக்காது. ஆண்டவரோடு நெருக்கமாக இருந்த மூன்று ஆண்டுகளில் அநீதியை நோக்கி மனோபாவம் வளர்ந்திருந்தது. அப்பொழுது தலைகீழான மனோபாவம் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது.

அப்போஸ்தலராக அவன் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, வெளியரங்கமான பார்வைக்கு வெளிப்படையாக நல்ல மனிதனாக இருந்தான். அவனது பெயருக்கு பொருள் "துதி" என்பதாகும். அவனது பெற்றோர்கள் மத வைராக்கியம் உடையவர்களாக இருந்திருக்க வேண்டும். இவன் தேவனுடைய தூதுவனாக இருந்து அவரது புகழை துதிப்பவனாக இருப்பான் என்று நம்பியிருப்பார்கள். இந்த வழியில் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தையும் சலுகையையும் அவன் அனுபவித்தான்!

சுவிசேஷ பதிவுகளில் அவனைப் பற்றி குறைவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பண ஆசையே அவனது வீழ்கைக்கு காரணமாக இருந்தது என்று நாம் யூகிக்கிறோம். இந்த தவறான ஆவியை கண்டித்து பெருந்தன்மை, அன்பு மற்றும் தயவு ஆகியவற்றை நாடுவதற்கு பதிலாக, அவன் சுயநலத்தை தனது இருதயத்திலும் வாழ்க்கையிலும் அனுமதித்தான். சிறு கூட்டத்திற்கு பொருளாளர் வேலையை தெரிந்து கொண்டான் என்று நாம் யூகிக்கிறோம். தனது சொந்த பலவீனத்தினிமித்தம் பணத்தை கையாளும் போது ஒரு சோதனையை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து அந்த வேலையை அவன் மறுத்திருந்தால் சரியானதாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு மாறாக, அந்த வேலையை நாடிப்பெற்று பணப்பையை எடுத்துச்சென்றான். அவன் ஒரு திருடன் என்று அப்போஸ்தலர் யோவான் நமக்கு கூறுகிறார். (யோவான் 12:6) பணத்தின் மேலுள்ள இந்த பேராசவம் நமது விழுந்து போன சுபாவத்தின் மற்ற இயற்கை குணத்தைப் போல பலமாக வளர்ந்தது. முப்பது வெள்ளிக்காசுக்கு தனது அன்பான ஆண்டவரை, மேசியாவை விற்கிற அளவுக்கு அது ஊக்கம் அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது.

மற்ற சீஷர்களைப் போல யூதாசும் அதே அர்ப்பணத்தை

செய்திருந்தான். "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்." மற்றவர்களைப் போல, ஒரு குறிப்பிட்ட வழியில் எல்லாவற்றையும் விட்டு, இவர் தான் மேசியா என்று அங்கீகரித்து மிகவும் உண்மையாயிருந்தான். ஆனால் யூதாஸ் வியாபார சிந்தை கொண்டவன். மேசியா ஸ்தாபிக்கும் மாபெரும் ராஜ்யத்தில் இணைந்து கொள்ள விரும்பினான். அவனது அர்ப்பணத்தில் கொஞ்சம் சுயநலமும் இணைந்திருந்தது. நம் எல்லாரிலும் இது அநேகமாக உண்மையாக இருக்கிறது. கர்த்தர் ஒரு ராஜ்யத்தை பெற்றிருப்பார்; நாமும் இதில் பங்கு பெறுவோம் என்று நாம் அனைவரும் உறுதியாக இருக்கிறோம். ஆனால் இந்த எண்ணம் இரண்டாம் நிலையானதாக இருக்க வேண்டும். நமது ஊழியத்துக்கு பரிசை விரும்புவதைவிட நமது தகுதி உயர்வானதாக இருக்க வேண்டும்.

யூதாஸ், சீஷர்களின் பொருளாளராக "தன் கூட்டை தானே கட்டிக்கொள்ள" ஒரு நல்ல பங்கை பெற எதிர்பார்த்தான். மரியாள் விலையேறப் பெற்ற தைலத்தை நமது கர்த்தருக்கு பயன்படுத்தின விஷயத்தில், இது மிகவும் விலையுயர்ந்ததாயிருந்தபடியால், அதை இயேசுவின் தலையில் ஊற்றியதற்கு பதிலாக அதை விற்று கஜானாவில் போட்டிருக்கலாம் என்று கூறினான். "அவன் திருடனான -படியினாலும் பணப்பையை சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்."

ஆகையால் இந்த பேராசையின் ஆவி அவனிடத்தில் வளர்ந்ததாகத் தெரிகிறது. காரியங்கள் முன்னேற்றம் அடைந்தாலும் யூதாஸ் எதிர்பார்த்த, நம்பியிருந்த காரியங்கள் உச்சக்கட்டத்திற்கு வரவில்லை என்பதை கண்டான். "இவைகளை நீ செய்தால், மற்றவர்கள் பார்க்கும்படி பகிரங்கமாக செய்" என்று சொன்னவர்களில் ஒருவனைப் போல அவனது இருதயத்திலாவது இருந்திருக்கும். இது யூதாஸ் மற்றும் இன்னும் அநேகரது ஆவியாக காணப்படுகிறது. தம்மை ஜனங்களுடன் நிலைநிறுத்த காரியங்களை இயேசு செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். "ஆயிரக்கணக்கானவர்களை தம்மிடம் வரச் சொல்லி, சிலரை உயிரோடு எழுப்பி, இப்படி நல்ல செயல்களை செய்து காட்ட வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள் என்று நாம் கற்பனை செய்கிறோம். ஆனால் இப்படி எதுவும் செய்யப்படவில்லை. ஒவ்வொரு அற்புதமும் நமது கர்த்தரால் மிகவும் அமைதியான முறையில் செய்யப்பட்டது.

யூதாஸ், இயேசுவுக்கு கொஞ்சம் "பயிற்சி" கொடுத்தால் இன்னும் அவர் சிறப்பாக செயல்பட முடியும் என்று அவன் நினைக்க ஆரம்பித்திருக்கலாம். கொஞ்ச காலம் சென்ற போது, கொஞ்சம் பணத்தை வைத்துக்கொள்ள ஆரம்பித்தான். ஒரு வேளை அவன் இப்படியாக நினைத்திருக்கலாம். "இப்பொழுது காரியங்கள் சிறப்பாக நடைபெறவில்லை. இதில் கொஞ்ச பணத்தை மழைக் காலத்திற்காக சீஷர்களுக்காகவும் இயேசுவுக்காகவும் வைத்துக் கொள்ளுவேன்." ஆனால் அவன் உண்மையிலேயே யூதாஸைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.

### நம்மை நாமே சோதித்தலின் அவசியம்

அநேகர் இதே மாதிரியான பகுத்தறிவு பாதையில் மற்றவர்களுக்கு உதவி செய்ய முயற்சிப்பதாக தங்களையே அறிவுறுத்துகின்றனர். அவர்கள் உண்மையிலேயே தங்களது சொந்த நலன்களையே பார்க்கிறார்கள். ஆகையால் நாம் நம்மையே சோதித்தறிய வேண்டும். புது சிருஷ்டியானது பழைய சிருஷ்டியை மூலையில் நிற்க வைத்து "இதை ஏன் இப்படி செய்தாய்" என்றும் "இந்த விஷயத்தில் உனக்கு சுயநலமில்லை என்பதை உறுதிப்படுத்த முடியுமா" என்றும் கேட்க வேண்டும். யூதாஸ் இப்படியாக தன்னைதானே சோதித்தறிந்திருந்தால் அவனுக்கு நல்லதாக இருந்திருக்கும். ஆனால் அவன் அப்படிச் செய்யாமல் நல்ல ஆவியிலிருந்து மேலும் மேலும் தூரம் சென்றான். கடைசியாக பிரதான ஆசாரியரிடம் சென்று அவன் கூறியதாவது: "இயேசுவைக் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?" அவர்கள் இவ்வளவு தருவோம் என்று கூறினார்கள். இந்த காரியத்தை தனது மனதில் பலமணி நேரம் வைத்திருந்தான். ஆகையால் அவன் "மேல் அறையில்" வேறு எண்ணமுடையவனாயிருந்து அவன் உட்கார்ந்து மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கவனித்துக் கொண்டிருந்தான்.

பஸ்கா இராப்போஜனத்தில் பங்கு பெறுவதற்கு முன்பு நமது கர்த்தர் அவரது அப்போஸ்தலர்களின் கால்களை கழுவினார். அவர்கள் மூழ்கியிருந்தபடியால் (பஸ்காவின் ஆரம்ப காலத்தில் எல்லா அழுக்குகளையும் நீக்கிப்போட வேண்டிய தேவை இருந்ததால்) அவர்கள் கால்களை மட்டும் கழுவினால் போதும் என்றும் அறிவித்தார். அவர்களது அங்கங்கள் தரையுடன் தொடர்பு கொண்டதால் அது அவசியம். "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும்." மேலும் ஆண்டவர் யூதாஸை குறிப்பிட்டு, "நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாரும் அல்ல" என்று கூறினார். அந்த சொற்றொடர் அவர் ஒரு மேலான சுத்திகரிப்பை மனதில் பெற்றிருந்தார் என்பதை காண்பிக்கிறது. இந்த கால்களை கழுவுதலும் முந்தைய முழ்குதலும் உருவகமாக சொல்லப்பட்டவை.

ஆண்டவரின் சீஷர்களின் இருதயம் விசுவாசமாக இருந்தது என்பதை அவர் அறிவார். அவர் அவர்களை தமது சீஷர்களாக ஏற்றுக்கொண்டிருந்தார்; அவர்களது கறைகளை மூடுவதற்கு தமது பலியின் புண்ணியத்தை அவர்களுக்கு சாட்டியிருந்தார். இவர்களின் சார்பாக ஆண்டவரின் பாவ நிவாரண பலியை ஏற்றுக்கொண்டதற்கு சாட்சியமாக விரைவில் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி கொடுக்கப்படவிருந்தது. எனினும் அவர்களில் ஒருவனது இருதயம் சுத்தமாக இல்லை. நமது கர்த்தர் அவனை கடந்து செல்லாமல், அவனது துரோகத்தை அறிந்திருந்தும் மற்றவர்களுடன் யூதாசின் கால்களையும் கழுவினார். அவன் முன்னரே பிரதான ஆசாரியரிடம் பேரம் பேசி, தன்னுடைய

ஆச்சரியமான திட்டத்தை நிறைவேற்ற ஏற்ற சந்தர்ப்பத்திற்காக காத்திருந்ததை அவர் அறிந்திருந்தார்.

நமது கர்த்தருடைய வார்த்தைகள் மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படாமல் இருந்தாலும், அவர் தொடர்ந்து கூறிய வார்த்தைகளினிமித்தம் யூதாஸ் அவரை புகழ்ந்திருக்க வேண்டும். பொதுவான உபசரணையை கூட மீறின யூதாஸையும் அவனது அவிசுவாசத்தையும் குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தை கர்த்தர் குறிப்பிட்டார். (சங்கீதம் 41:9) இவைகளில் எதுவும் யூதாஸை அசைக்கவில்லை. இவைகளில் எதுவும் அவனது வாயை மாற்றுகிறதற்கான விதத்தில் அவனது இருதயத்திற்கு செல்லவில்லை. இப்படியாக வேண்டுமென்றே நோக்கங்கொண்ட அவனது குற்றத்தை குறிப்பிடுகிற பலமான ஆதாரத்தை நாம் பெற்றிருக்கிறோம். நமது கர்த்தர் அவனை "கேட்டின் மகன்" என்று கூறியதும் அவன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும் என்று கூறியதும் தெளிவான பொருளைக் கொடுக்கிறது.

### "என் பிராண சிநேகிதன் என்மேல் தன் குதிங்காலைத் தூக்கினான்"

அவர்கள் இரவு போஜனத்தில் இருந்த போது இயேசு துக்கமாக காணப்பட்டார். அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பன்னிரெண்டு பேரில் ஒருவன் தன்னைக் காட்டிக் கொடுப்பான்; தனது மரணத்துக்கு துணையாக இருப்பான்; தன்னுடன் பந்தியிலிருக்கிற, தன்னுடன் இரவு போஜனத்திலும் அப்பத்திலும் சுடப்பட்ட ஆட்டிறைச்சியிலும் பங்கு பெறுகிறவனே அதைச் செய்வான் என்று விவரித்தார். எனினும் எல்லாம் எழுதப்பட்டிருந்தது என்று சுட்டிக் காட்டினார். (சங்கீதம் 41:9) தெய்வீக திட்டத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படாது. எனினும் அது நட்பின் கடுமையான மீறலை குறிப்பிட்டது. சிந்திக்கவே ஒருவர் வருந்துவார். கர்த்தரின் நோக்கத்தையும் அவரது அர்ப்பணிப்பையும் பொருத்தவரை, எந்தவித மாற்றத்தையும் காட்டிக் கொடுத்தலும் இல்லாமல் ஆட்சியாளரால் பிடிக்கப்படுதல் அல்லது அந்நியன் அல்லது ஒரு சீஷனால் காட்டிக் கொடுக்கப்படுதல் அவருக்கு உண்மையில் எந்தவித வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. உண்மையானது தெய்வீக திட்டத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. காட்டிக்கொடுத்தது நெஞ்சார்ந்த நண்பனும் சீஷனுமாயிருந்தவன் என்பதே கர்த்தருக்கு பெரிய துக்கமாக இருந்தது.

வஞ்சகம் மற்றும் காட்டிக் கொடுத்தல் யூதர்கள் மற்றும் அரேபியர்களிடையே அசாரணமானது அல்ல. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒழுங்கு இருந்தது. அதன்படி உணவிட்டவனுக்கு இரண்டகம் பண்ணக்கூடாது. உணவு உப்பால் ருசி உண்டாக்கப்பட்டதால் உடன் உண்பவர்களுக்கு உண்மையுடன் இருக்க வேண்டும். இது உப்பின் உடன்படிக்கை, அதாவது விசுவாசத்தின் உடன்படிக்கையாக அறியப்பட்டது. ஒருவருடன் பந்தியில் இருந்து, உப்பினால் ருசியாக்கப்பட உணவில் பங்கு பெற்றால் எதிரியாக நினைப்பது நட்பை இழப்பதாகும். யூதாஸ் சரியான ஆவியில் பின்தங்கியிருந்தான் என்பது வெளிப்படையாக இருந்தது. அந்த காலத்தில் இருந்த வழக்கத்தை அங்கீகரிக்கவோ கீழ்ப்படியவோ இல்லை. யாருடைய அப்பத்தை புசித்து, உப்பில் பங்கு பெற்றானோ அவரிடத்தில் உண்மையாகவும் விசுவாசத்துடனும் இல்லை. ஆகையால் நமது கர்த்தரின் வார்த்தைகளாவன: "என்னோடே கூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்."

இயேசு அப்பத்தை யூதாசிடம் கொடுத்த போது, அவன் கர்த்தரின் வார்த்தையின் பொருளை ஓரளவுக்கு உணர்ந்திருப்பான். மற்ற சீஷர்கள் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்; கடைகள் மூடப்படுவதற்கு முன் தேவையான பொருட்களை வாங்கி வரும்படி அவனை ஆண்டவர் அனுப்பினதாக நினைத்தார்கள். ஆனால் யூதாஸை பெற்றிருந்த எண்ணமாவது: "நான் இயேசுவை காட்டிக்கொடுப்பேன் என்பதை அவர் அறிந்திருக்கிறார். இதை செய்ய வேண்டும் என்பது நோக்கமல்ல. ஆனால் அவரைக் காண்பிப்பேன். அவர் அந்த அதிகாரிகளிடமிருந்து தப்பிவிடுவார் என்பதை நான் நிச்சயமாக அறிவேன். நான் இந்த கூட்டத்திற்கு பொருளாளர், நான் அவரை காட்டுவேன். அவர்கள் அவரை பிடித்துக் கொள்வார்கள் என்பதை நான் நம்பமாட்டேன். எனினும் அனுபவம் ஒரு நல்ல பாடம். இனிமேல் இதைத் தொடர்வது நல்லது என்பதைக் காண்பார். இந்த காரியம் நீண்ட நாட்களாக தள்ளிப்போய்க் கொண்டிருக்கிறது, இங்கே வியாபார உந்துதல் தேவைப்படுகிறது. ஆகையால் இங்கே நடக்கிறது!" இப்படியாக யூதாஸ் காரணம் காட்டி தன் பங்கை நிறைவேற்றினான். இயேசு தப்பித்து விடுவார் என்பதில் யூதாசுக்கு சந்தேகமேயில்லை. இயேசு பாடுபடுவார் என்று ஒரு கணம் கூட அவன் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் அவனது திட்டம் நிறைவேறினது. இயேசு சிலுவையில் அறைப்படுவார் என்று அறிந்த போது, அவன் சென்று நான்று கொண்டு செத்தான். பிறகு கயிறு அறுந்து தலை கீழாக விழுந்தான்.

### "அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும்"

இயேசு, தமது மரணம் தம்மை காட்டிக் கொடுத்தவனுக்கோ அல்லது அவரது சத்துருக்களுக்கோ வெற்றியல்ல, ஆனால் தீர்க்கதரிசிகள் அவரைப் பற்றி எழுதினவைகளுக்கு இசைவாக இருக்கும் என்று சாட்சியமளித்தார். யூதாஸ் தனது பொறுப்பில்லாமலோ, அவன் தனது சொந்த விருப்பம் இல்லாமலோ, வெறுமனே தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினான் என்று நாம் கருதக்கூடாது. அப்படிப்பட்ட கருத்து நமது கர்த்தரின் அறிக்கைக்கு எதிராக இருக்கிறது. "எந்த மனுஷனால் மனுஷ குமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்."

கர்த்தரின் நிலைப்பாட்டிலிருந்து அவரது அறிக்கை நமக்கு குறிப்பிடுவதாவது; யூதாஸ் முன்னரே அதிகமான அறிவை அனுபவித்திருந்தான். நல்ல காரியங்களுக்காக சந்தர்ப்பத்தை பெற்றிருந்தான். அதாவது அவனது கிரியைக்கான பொறுப்பு நிறைவடைந்தது. எதிர்காலத்தில் எந்த சமயத்திலும் அவனுக்கு நம்பிக்கை என்பது இல்லாமல் போகும். இந்த வார்த்தைகள் எந்தவித சந்தேகத்தையும் கொடுக்கவில்லை என்று நாம் நினைக்கிறோம். நமது

கர்த்தருடன் நெருங்கிய தொடர்பின் மூலம் யூதாஸ் மகா பாவ நிவாரண வேலையின் பங்கை முன்னரே அனுபவித்திருந்தான். சத்தியத்தைக் குறித்த தெளிவான அறிவுக்கும் அதற்கான பொறுப்புகளுக்கான ஏராளமான சந்தர்ப்பங்களை முன்னரே பெற்றிருந்தான். நமது நிலைப்பாட்டின்படி யூதாஸ் மாபெரும் ஒளிக்கு எதிராக பாவம் செய்தான். அவனது பாவம் வெளிப்படையாக "மரணத்திற்குரிய பாவம்," இரண்டாம் மரணத்திற்குரியது. எதிர்கால வாழ்வு இல்லை என்பதை தவிர்த்து அவனது வாழ்க்கை பயனில்லாமல் போனது, வீணானது என்பதை நாம் கவனிக்க வேண்டும். யூதாசின் முடிவு சோகமான ஒன்று. ஒவ்வொரு தற்கொலையும் அவனது கிரியை மூலமாக அவன் பிறந்திருக்கவே கூடாது என்பதை ஒப்புக்கொள்ளுவதாக இருக்கிறது.

யூதாஸ் பெந்தெகொஸ்தேவுக்கு முன் வாழ்ந்த போது, இயேசு தமது ஆவியை ஓரளவுக்கு வழங்கப்பட்ட பன்னிரண்டு பேர்களில் ஒருவனாக இருந்தான் என்பதையும், அந்த ஆவி மற்றவர்களைப் போல, கர்த்தரின் நாமத்தில், அவரது வல்லமையை பயன்படுத்தி அவருடைய பிரதிநிதியாக சுகமளித்தல், பிசாசுகளை துரத்துதல் முதலான அற்புதங்களை செய்யக்கூடியவனாக இருந்தான் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ஆகையால் யூதாசின் நிலை கர்த்தரிடத்தில் மிகவும் நெருக்கமானவனாகவும் அவரது சொந்த கட்டளைகள் மற்றும் உதாரணங்களான வழிமுறைகளையும் பெற்றவர்களில் ஒருவனாகவும் இருந்தான். நமது கர்த்தர் தமது சீஷர்களுக்கு சொன்ன வார்த்தைளை நினைவுகூருகிறோம். "பரலோகத்தின் ரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கோ அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாக சொல்லப்படுகிறது."

இந்த அனைத்து சலுகை, சந்தர்ப்பம், அறிவு, தொடர்பு யூதாஸை விசேஷித்த பொறுப்புள்ளவனாக்கியது. ஆனால் அவன் செய்த குற்றம் சாதாரண மனிதனுக்கு எதிராக செய்திருந்தால் அது மன்னிக்க முடியாததாக இருந்திருக்கும். இதற்கு முன் யாரும் பேசாத, கிரியை செய்யாத காரியங்களை பேசிய அல்லது கிரியை நடப்பித்தவருக்கு விரோதமாக செய்ததால் அந்த குற்றம் இன்னும் தீவிரம் அடைந்தது. இந்த நிலைப்பாட்டிலிருந்து நமது கர்த்தர் அவனை "கேட்டின் மகன்" என்று அறிவித்ததில் விசேஷித்த முக்கியத்துவம் பெறுகிறது. அவன் தேவையான வெளிச்சத்தையும் நீதியைப் பற்றிய போதுமான அறிவையும் பெற்றிருந்ததால் சோதனைக்கு தகுதியுள்ளவனாக இருந்தான் என்பதை குறிக்கிறது. இப்படிப்பட்ட வெளிச்சம் மற்றும் அறிவுக்கு எதிராக வேண்டுமென்றே செய்த பாவம் இரண்டாம் மரணத்திற்குரியதானது.

ஆனால் இப்படிப்பட்ட ஒரு குணலட்சணத்தை வெறுத்து, இகழ்ந்து, நமது குணலட்சணத்தில் அதற்கு எதிர் திசையில் செல்ல நாடும் போது, கர்த்தருடைய சீஷர்கள் என்று சொல்லபடுகிறவர்களினால் சிலர், யூதாசைப் போன்று குறைந்த அளவில் இந்த பாவத்தை செய்கிறதை நாம் கவனிக்காமல் விடக்கூடாது. கர்த்தரை நேசிப்பதாக வெளியரங்கமாக கூறிக்கொண்டு அவரை விற்கிறார்கள். காட்டிக் கொடுக்கிறார்கள்! உண்மை, இது இன்றைக்கு நேரடியாகவும் சொல்லர்த்தமாகவும் செய்ய முடியாது. ஆனால் அதன் ஆவி எப்போதாவது காணப்படுகிறது என்று சொல்வதற்கு வருந்துகிறோம். உண்மையிலேயே இயேசுவில் விசுவாசம் வைத்திருக்கிற சிலர், அவருடைய சீஷர்களாக இருக்கும்படி தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணியிருக்கிற சிலர், அவருடைய சத்திய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற சிலர், அங்கே யூதாஸ் இருந்தது போல உபயோகமற்ற பொருளுக்காக, தற்கால வாழ்க்கைக்கான நல்ல பொருட்களுக்காக, ஒரு சம்பளத்திற்காக, சமூக அந்தஸ்துக்காக, மனிதர்களிடையே கனத்திற்காக, புகழ் மற்றும் பேருக்காக கர்த்தரை விற்க விரும்புகிறார்கள்; யூதாஸ் செய்தது போல வாயின் வார்த்தைகளைக் கூட விற்க விரும்புகிறார்கள். கர்த்தரை கனப்படுத்தி ஊழியம் பண்ணுகிறேன் என்று சொல்லுகிறவர்கள் அவருடைய வார்த்தை, அவருடைய திட்டம் மற்றும் அவரது குணலட்சணத்தை தவறாக சித்தரிக்கவும் கர்த்தரை கொலை செய்ய நாடுகிறவர்களுடன் சேர்ந்து கொள்ளவும் விரும்புகிறார்கள்.

இராப்போஜன இரவில் ஒவ்வொருவரும், "ஆண்டவரே, நானோ, நானோ" என்று ஒவ்வொருவராய் கேட்டது எப்படி இருந்தது? யாரும் தன்னையே மன்னிக்க தயாராயில்லாதிருப்பார்களாக; ஆனால் எந்த சலுகைக்காவது எந்த வழியிலாவது தனது வாழ்க்கை மற்றும் சத்தியத்தை பலிக்கொடாதிருக்க ஒவ்வொருவரும் தனது சொந்த இருதயம், வாழ்க்கை மற்றும் நடத்தையை பார்ப்பார்களாக.

முப்பது வருடங்களுக்கு முன்னர், அனைவரும் அனைத்து சத்திய அறிவுக்குள் வரவேண்டும், இல்லையென்றால் இரண்டாம் மரணம் தான் என்று நினைத்தோம். ஆனால் இப்பொழுது அது கர்த்தருடைய நோக்கமும் திட்டமும் இல்லை என்ற வேதவாக்கியங்களின் பொதுவான நோக்கத்திலிருந்து முடிவுக்கு வந்திருக்கிறோம். மாறாக, சுவிஷேச யுகத்தின் அடிப்படை கொள்கைகளை வேண்டுமென்றே அறிவுடன் நிராகரிக்கிறவர்கள் எந்தவித சலுகைகளுக்கும் தகுதியற்றவர்கள் என்பதைக் குறிக்கிறது. ஏனெனில் கொஞ்சத்தில் உண்மையற்றவர்களாக இருப்பவர்கள் அதிகமான காரியங்களிலும் உண்மையற்றவர்களாக இருப்பார்கள்.

தெய்வீக திட்டத்தைக் குறித்து ஆதாமின் அறிவு மிகவும் குறைவாகவே இருந்தது. எனினும் அவரது கீழ்ப்படியாமை மரண தண்டனையை கொண்டு வந்தது. மக்களின் மீது அனுதாபம் மற்றும் நம்பிக்கைக்கான உண்மையான காரணங்கள், சாத்தான் அவர்களது மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான் என்பது அப்போஸ்தலரின் அறிக்கையாக இருக்கிறது. (2 கொரிந்தியர் 4:4) ஆயிரம் வருட யுகத்தில் சாத்தான் கட்டப்படும் போது "கண்கள் அனைத்தும் பார்வையடையும்."

கர்த்தருடைய வேலையில் எந்த ஒரு குறையும் கண்டு பிடிக்க முடியாமல் அதை சாத்தானுடையதாக குறிப்பிட்ட பரிசேயர் மற்றும் சதுசேயருக்கு நம்பிக்கை இல்லை என்று நாம் வருந்துகிறோம். ஏனெனில் யூதாசின் கண்ணீர்

ஏசாவினுடையதைக் காட்டிலும் மேலானது அல்ல. (எபிரேயர் 12:17) அவனுடைய வருத்தம் புதுப்பிக்கப்பட்ட அல்லது திருந்திய வாழ்வுக்கு வழிநடத்தாமல் சுய அழிவுக்கு வழிநடத்தியது. (எபிரேயர் 6:6)

### பேதுரு, உணர்ச்சிவசப்பட்டவர் – யூதாஸ் உண்மையற்றவன்

யூதாஸ் நமது ஆண்டவரை காட்டிக்கொடுத்த போது நெருங்கிய நண்பனும் தோழனுமானவன் அவரை மறுதலித்தான். பேதுருவின் காரியத்தை நாம் நன்கு அறிவோம். பேதுரு ஒரு நல்ல மனிதன், பலமான குணலட்சணம் உடையவர், அவரது ஆபத்தை அவர் உணரவில்லை. ஆகையால் அவர் சாத்தானின் உபாய தந்திரத்துக்கு தயாராக இல்லை. அதன் மூலம் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படும் நிலையில் இருந்தார். அவர் பெருமைப்படுத்திக் கொண்டிருந்த தைரியம் பறந்து போனது. வழக்கமான பலமான குணம் மறைந்து போனது. தன்னுடைய ஆண்டவரை அவதூறுடன் மறுதலித்தார்! மானிட பலவீனத்திற்காக நமக்கான எப்படிப்பட்ட ஒரு பாடம்! பிசாசின் தந்திரத்தினால் எப்படி நாம் மேற்கொள்ளப்பட்டு சிக்குகிறோம்! நாம் சோதனைக்கு உட்படுத்தப்படாதபடி எப்படி விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்! "எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று நமக்கு ஆண்டவர் கற்றுத் தந்திருக்கிறார். ஜெபம் எவ்வளவு அவசியமானது என்பதை நாம் நினைவுகூர வேண்டும்!

யூதாசுக்கு அது விதிக்குரிய நேரமாக இருந்தது! பேதுரு விழித்திருந்து ஜெபிப்பதில் குறைவுபட்டிருந்ததால், உண்மையான இருதயம் உடைய அவரை சத்துருவானவன், ஏமாற்றி, வஞ்சித்து, தவறாக வழி நடத்தக்கூடும் போது, உண்மையற்ற இருதயத்தை உடையவனுக்கு சுயநலவாதியும் சுயத்தை நாடுபவனும் பேராசையும் இலட்சியமும் உடைய யூதாசை எதுவும் செய்ய முடியும் என்பதை நாம் எதிர்பார்க்காமல் இருக்கக்கூடுமா! சீக்கிரத்தில் யூதாசின் மேல் சாத்தான் பெற்ற வெற்றியைக் குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. அதாவது அவன் சத்துருவானவனின் கண்ணியில் சீக்கிரமாய் விழுந்து, முப்பது வெள்ளிக்காசுக்கு ஆண்டவரை காட்டிக்கொடுக்க தனது இருதயத்தையும் ஆற்றலையும் கடன் கொடுத்தான்! அவனது காரியம் பேதுருவினுடையதைக் காட்டிலும் முற்றிலும் வேறானது. பேதுரு உண்மையும் விசுவாசமும் உடையவராயிருந்தார். அவர் ஒரு கணம் தடுமாறி பயமுடையவராகவும் ஜாக்கிரதை அற்றவராகவும் இருந்தார். இரண்டு காரியங்களிலும் ஆபத்து ஒரே மாதிரி இருந்தாலும் அவர்களது இருதயம் வெவ்வேறான நிலைமையில் இருந்தது.

இதே போல எல்லா கர்த்தருடைய சீஷர்களுக்கும் இருக்காதா? நம்மில் ஒவ்வொருவருக்கும் வருகிற சோதனைக்கான பலன் இது இல்லையா? இன்றைய யூதாஸ் வகுப்பார், சோதனை வரும் போது அதைப் பெற்று, அதை உபசரித்து முன்னேறும் ஆசை அல்லது பலமான கவர்ச்சியின் ஆவிக்குள் நுழைந்து, அதனால் விழுங்கப்படுகிறார்கள். பேதுரு வகுப்பாரும் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார்கள். இன்றைக்கும் கூட உண்மையான இருதயம் உடையவர்கள் விழித்திருந்து ஜெபித்தலில் குறைவுபட்டு, சாத்தானின் கவர்ச்சியில் சில சமயங்களில் அறியாமல் இழுக்கப்படுகிறார்கள். ஒரு கனம் கர்த்தருக்கு மாத்திரமல்ல தங்களது சொந்த இருதயங்களுக்கும் மனசாட்சிக்கும் அவமதிப்பாக இருக்கிறார்கள்.

இந்த இரண்டு வகுப்பாருக்கும் வித்தியாசம் இருதய நிலைமையில் இருக்கிறது. பேதுரு வகுப்பார் செய்ய விரும்பாத இந்த காரியங்களை செய்கிறார்கள். அவர்களது பலவீனம், அவர்களது மாம்சத்தில், சத்துருவானவனின் சக்தியில் இருக்கிறது. அவர்களது தோல்வியில், ஏற்ற சமயத்தில் உதவிக்காக கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உதவியை பற்றிக் கொள்ள வேண்டும்.

மாறாக, உண்மையற்ற இருதயத்தையுடைய யூதாஸ் வகுப்பார் சுயநலமுடையவர்களாக இருந்து, முழு இருதயத்தோடு சத்துருவானவனின் திட்டத்திற்குள் நுழைகிறார்கள். அவர்களது தவறான வழியில், தங்களது சொந்த சித்தத்திற்கு எதிராக சென்று அதன் பிறகு அதனுடன் இணக்கமாகிவிடுகிறார்கள். தேவனுடைய பார்வையில் வித்தியாசம் காணப்பட்டு, பேதுருவும், யூதாசும் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தாலும் ஒருவர் தேவனுடைய கிருபைக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறார், மற்றவர் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வெறுமனே சிக்குண்டு ஆனால் இருதயத்தில் உண்மையற்றவராயில்லாதிருந்த ஒருவர் திரும்ப ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் மற்றவர் மனசாட்சிக்கு விரோதமாக இல்லாதிருந்தாலும், பின்னர் அவனது வருத்தத்தை காண்பித்தாலும், இருதயத்தில் உண்மையான விசுவாசம் இல்லை. அது கர்த்தருடைய பார்வையில் இன்றியமையாதது. அது இல்லாதிருந்தால், யூதாஸ் கர்த்தருடன் இருந்த நெருக்கமான அறிமுகத்தை கவனிக்கும்போது மன்னிக்க முடியாதது.

"சீமோனே, சீமோனே, கோதுமையை சுளகினால் புடைக்கிறது போல சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" (லூக்கா 22:31,32) என்று கர்த்தர் பேதுருவிடம் சொன்ன வார்த்தைகள் நமக்கு நம்பிக்கையை தருகிறது. இரண்டு பேரின் இந்த இருதய வேறுபாட்டினால், நமது கர்த்தர் ஒருவருக்கு பிதாவிற்கு முன்பாக பரிகாரியாக இருக்க முடிந்தது. ஆனால் மற்றவனுக்கு அவர் பரிகாரியல்ல. அவனது பாதுகாப்புக்காக தேவன் வழங்கியவைகளில் கவனம் இல்லாதிருந்தாலும், மாம்சத்தில் பலவீனமாயிருந்தாலும் இருதயத்தில் உண்மையாக இருந்த ஒருவனுக்காக அவர் நின்று பிரதிநிதித்துவப்படுத்துவார். அவன் இன்னும் கர்த்தரின் ஆடாக இருந்தான். ஆகையால் அவன் மேய்ப்பனின் கவனிப்புக்கு கீழாக இருந்தான். அவன் இன்னும் கர்த்தரின் அங்கமாகவும், தலையானவரின் அக்கறைக்கும் மேற்பார்வைக்கும் கீழாக இருந்தான். கர்த்தருக்கு நியமிக்கப்பட்ட கன்னியாகிய சபையின் அங்கமாக இன்னும் அவன் இருந்தான். அவனை நேசித்து அவனுக்காக நமது கர்த்தர் தமது ஜீவனைக் கொடுத்தார். ஆகையால் அவன் நிச்சயிக்கப்பட்ட மணவாளனிடம் முறையாக வேண்டுதல் செய்ய வேண்டும்.

ஆனால் யூதாசின் விஷயத்தில், கர்த்தர் ஊழியத்தை ஆரம்பித்த போது யூதாஸ் பெற்றிருந்த உண்மையாக மதித்தலும் அன்பும் சுயநலத்தின் மூலமாக வெளிப்படையாக மரித்துப் போனது; சுயநலம் மற்றும் முன்னேறும் ஆசையினாலும் விழுங்கப்பட்டான். இப்படியாக அவன் இருதயம் கர்த்தரிடத்திலிருந்து விலக்கப்பட்டு, சாத்தான் உள்ளே புகுந்தான் என்று நாம் அறிவிக்கப்படுகிறோம். இப்படியாக அவன் விரும்பி கர்த்தரிடத்திலிருந்து அவனது இருதயத்தையும் பலத்தையும் அர்ப்பணிப்பையும் திரும்பப் பெற்று, அவற்றை சுயத்தை தேடுவதில் விரும்பி கடன் கொடுத்து, சத்துருவானவனின் கருவியானான். நமது ஆண்டவர் கூறினதாவது: "இடறல்கள் வருவது அவசியம், (அவர் சிலுவையில் அறையப்பட வேண்டும்) ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ!"

### அறுவடை பிரிப்பதற்குரிய ஒரு காலம்

இருதயத்தில் உண்மையுள்ள கர்த்தரின் சீஷர்கள் யாரும் சத்துருவினால் அவரது கையிலிருந்து பிடுங்கப்பட மாட்டார்கள் என்பதை நாம் முன்னரே அறிந்திருந்தாலும், அவர் சீஷர்களுக்கு "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று அறிவுறுத்தும் போது, நமது கர்த்தரின் உணர்வுகளைக் குறித்து ஓரளவுக்கு நாம் ஒத்த உணர்வு கொள்கிறோம்.

உண்மைதான், இயேசு தம்மை யார் காட்டிக்கொடுப்பான் என்பதை அறிந்திருந்தார். ஆகையால் அவர் யூதாசின் மார்க்கத்தை குறித்து ஆச்சரியப்படவோ அல்லது குழப்பமடையவோ இல்லை. இன்னும் கூட அவருடன் அப்பம் புசித்தவனே, "அவர் மேல் தன் குதிங்காலைத் தூக்கினான்" (யோவான் 13:18) என்ற கருத்தும் நமது அன்பான ஆண்டவரை வருத்தப்பட வைக்கக்கூடியதாக இருந்தது. அவர் தம்முடைய மிகவும் கசப்பான சத்துருக்களிடத்திலும், பேதுருவைப் போன்று ஆரம்பத்தில் சத்துருவானவனின் தாக்குதலை தாங்க முடியாமல் தோல்வியுற்று, பிறகு தெய்வீக உதவிக்கும் இரக்கத்திற்கும் மீட்கப்பட்டவர்களிடத்திலும் நிச்சயமாக இரக்கம் உடையவராக இருந்தார்.

கிறிஸ்துவின் சரீரம் ஒன்றாக இருப்பதால், அவரது அங்கங்களில் சிறியவனுக்கு செய்யப்பட்டது அவருக்கே செய்யப்படடது என்று நமது கர்த்தர் அறிவிக்கிறார். யூதாஸ் வகுப்பாரும் பேதுரு வகுப்பாரும் சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த கணம் வரை இருந்து, கர்த்தரின் அங்கங்களை காட்டிக் கொடுத்துக்கொண்டோ அல்லது மறுதலித்துக் கொண்டோ வருவதால் நமது கர்த்தரை காட்டிக்கொடுத்திருக்கிறார்கள் அல்லது மறுதலித்திருக்கிறார்கள். ஆகையால் அவர் பேதுருவிடம் "உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு நான் உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்கிற கூற்றின் முக்கியத்துவத்தை நாம் கவனிக்க வேண்டும்.

பேதுரு வகுப்பார் அனைவருக்கும், கர்த்தர் தலையாகவும் பிதாவுக்கு முன்பாக பிரதிநிதியாகவும் பரிகாரியாகவும் இருக்கிறார். அவரது உதவியில்லாமல், நமக்காக அவர் பிரசன்னமாகாமல், நமக்காக அவர் தமது பலியின் புண்ணியத்தை நமக்கு சாட்டாமல் நம்மில் யாரும் நிலைநிற்க முடியாது. அனைவரும் அபாத்திரர் என்று தீர்க்கப்படுவோம்; தேவன் நம்மை அழைத்து இயேசுவுடன் பங்கு பெறக்கூடிய மாபெரும் ஆசீர்வாதங்களுக்கு நாம் தகுதியற்றவர்கள் என்று தீர்க்கப்படுவோம். அப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டவர் ஜெபித்தார், இப்போது பரிந்து பேசுகிறார்; அவர்களது விரும்பாத அபூரணங்களை நல்லதாக ஆக்குகிறார். அதன் மூலம் அவரது ஆவியை பெற்றிருக்கிற அனைவரும் அன்பையும் பெருந்தன்மையையும் அனுதாபத்தையும் உணர்ந்து பேதுரு வகுப்பாரிடம் உதவிகரமாக பேசுகிறார்கள். வெளிப்படையான மற்றும் முன் கூட்டியே திட்டமிட்ட எதிரியும் துரோகியுமாகிய யூதாஸ் வகுப்பாருக்கு அப்படிப்பட்ட அனுதாபமான வார்த்தைகளை ஆண்டவர் பெற்றிருக்கவில்லை. அது போல அப்படிப்பட்டவர்கள் மேல் வருத்தமான உணர்வுகள் இருந்தாலும், அவர்களது தீங்கான வேலையில் அனுதாபமான அல்லது ஒத்துழைப்பான வார்த்தைக்கு இடமேயில்லை. அப்போஸ்தலர்களில் யாராவது ஒத்துழைப்பு செய்திருந்தால் அது அவனது தீங்கான செயல்களில் பங்கு பெற்றதாக பொருள் படும்.

எனினும் பேதுரு மற்றும் அதே மாதிரியான குணலட்சணம் மற்றும் அனுபவம் உடையவர்களுக்கு நாம் அதிக அனுதாபத்தை உணரலாம். எனினும் தனக்காக விழித்திருந்து ஜெபிப்பதில் அவரது அக்கறையின்மைக்காக கர்த்தர் ஜெபித்ததில் நாம் களிகூரலாம். ஏனெனில் அதனால் கர்த்தருடனான அவரது உதவி பாதிப்படையவில்லை. எனினும் பேதுரு வகுப்பாரைப் போல நாம் இருக்க முயற்சி செய்யக்கூடாது. ஆனால் கர்த்தராலேயே குறிப்பிடப்பட்ட வகுப்பாரைப் போல இருக்க முயற்சிக்க வேண்டும். நாம் விழித்திருக்கிற, ஜெபிக்கிற, உண்மையுள்ள வகுப்பாராக இருப்போமாக. அவர்கள் தற்காலத்தில் சத்துருவின் சோதனைகளால் மேற்கொள்ளப்பட மாட்டார்கள்.

நாம் சுவிசேஷ யுக அழைப்பில் இருக்கிறோம். கோதுமையிலிருந்து களையை பிரிக்க தகுந்த காலமாக இருக்கிறது. இதைக்காட்டிலும் பதரை கோதுமையிலிருந்து பிரிக்கும் காலமாக இருக்கிறது. அதாவது தூற்றுதல் வேலை. இந்த உருவகம் கடந்த கால சபைக்கு ஓரளவுக்கு பொருத்தமாக இருந்தாலும், இந்த "யுகத்தின் முடிவில்" இருக்கிற சபைக்கு விசேஷித்த விதமாக பொருந்துகிறதாக இருக்கிறது. அதாவது யூத யுக முடிவில் அல்லது அறுவடையில் வாழ்ந்தவர்களுக்கும் இந்த சுவிசேஷ யுக முடிவில் அல்லது அறுப்பில் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கும் இது பொருந்தும். மேலும் நமது கர்த்தர் இந்த தூற்றுதல்களை அனுமதிப்பதில் பிரியமாயிருக்கிறார். யூதாஸ் வகுப்பார் தூற்றி வெளியேற்றப்படுவதற்கு அவை அவசியமாக இருக்கின்றன. பேதுரு வகுப்பார் சோதனைகள் மற்றும் துன்பங்களினால் சிறைப்பட்டு தங்களது சொந்த பலவீனங்களை உணர்ந்து கொள்ளக்கூடும். கர்த்தரின் நிலைநிறுத்துகிற கிருபையில்லாமல் அவர்கள் முற்றிலுமாக தோல்வியடைவார்கள் என்ற அறிவைப் பெறுவார்கள். இந்த பாடங்கள் சாந்தம், விழித்திருத்தல், ஜெப சிந்தை மற்றும் வல்லமையான அவர்களது தலையானவரில் நம்பிக்கையை அபிவிருத்தி செய்யும்.

### யூதாஸின் காரியம் ஏன் நம்பிக்கையற்றதாக இருக்கிறது

இந்த தற்கால யுகத்தில் (சுவிசேஷ யுகம் அல்லது ஆவிக்குரிய யுகம்) உலக மனுமக்கள் இரண்டாம்

மரணத்துக்குரியவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதை இதுவரை நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம். (1) ஏனெனில் இந்த யுகம் சபையின் நியாயத்தீர்ப்புக்கானது, உலக மனுக்குலத்தின் நியாயத்தீர்ப்புக்கானது அல்ல; (2) தேவனுடைய பிரமாணத்தின் உச்சக்கட்ட தண்டனையான இரண்டாம் மரணம் கொடுக்கப்படக்கூடிய அளவுக்கு உலகமானது இன்னும் சத்திய வெளிச்சத்துக்குள் வரவில்லை; (3) ஏனெனில் சத்துருவானவன் இப்பொழுது உண்மையான விசுவாசிகளைத் தவிர மற்ற அனைவரையும் வஞ்சித்து மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான் என்று பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் அறிவிக்கிறார். (2 கொரிந்தியர் 4:4; வெளிப்படுத்தல் 20:3) மேலும் அவர் அறிவிப்பதாவது: "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரிந்தியர் 2:14)

பொதுவாக வேதவாக்கியங்களின் இந்த முடிவுகள் எபிரேயர் 6:4-8 மற்றும் 10:26-31) வசனங்களில் உறுதிப்பண்ணப்படுகின்றன. அதில் அப்போஸ்தலர் சபையை எச்சரிக்கிறார்; அதாவது அர்ப்பணம் செய்த விசுவாசிகளின் சலுகைகளை அனுபவிக்கிறவர்கள். தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் யுகத்தின் பெலன்களையும் ருசிபார்க்கிறவர்கள், பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறவர்கள் மனப்பூர்வமாய் பாவம் செய்தால், துரோகம் செய்தால் நம்பிக்கையற்றவர்களாக விடப்படுவார்கள் என்று எச்சரிக்கிறார். அவர்களை புதுப்பிக்கிறது கூடாது காரியம். ஏனெனில் பாவத்திற்கான பலியில் அவர்களுக்கு இனி எந்த பங்குமிராது. "எல்லாருக்குமான மாபெரும் மீட்கும் பொருளை" பெற்றிருந்து, தவறாக பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அப்போஸ்தலரால் விவரிக்கப்பட்ட மனுப்பூர்வமாய் பாவம் செய்கிற, துரோகம் செய்கிற சந்தர்ப்பத்தை நாகரீகம் அடைந்த தேசங்களில் கூட பெற்றிருக்கவில்லை என்கிற உண்மையை நாங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். விசுவாசிகள் செய்த மரணத்திற்கேதுவான பாவமும், மாம்சீக பலவீனத்தினால் நடக்கிற தடுக்கலும் தவறுகளும் ஒரே மாதிரியானது அல்ல என்பதை கவனிப்பது நல்லது. (கலாத்தியர் 2:11-14) இந்த பாவங்கள் வருந்தி, திருந்தினால் மன்னிக்கப்படும். (1 யோவான் 2:1; 5:16)

மேற்சொல்லப்பட்டவைகளில் நாம் மேலும் சொல்வது என்னவென்றால் ஆவிக்குரிய யுகம் பெந்தெகொஸ்தே நாளில் நமது ஆண்டவர் மகிமையடைந்த பிறகு ஆரம்பித்தது. (யோவான் 7:39) யூதாசின் பாவமும் மரணமும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு இருந்ததால், அவனது காரியம் நம்பிக்கையில்லாதது என்ற நமது போதனையைக் குறித்து சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். முரண்பாடாக காணப்படுகிற இது குறித்து விளக்கும்படி நாம் கேட்கப்படுகிறோம்.

நாம் பதிலளிக்கிறோம், நமது கர்த்தரின் முதலாம் வருகையின் பிரசன்ன காலம் - அவரது ஞானஸ்நானத்திலிருந்து பரலோகம் சென்றது வரை, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இந்த யுகம் முழுவதும் வேறுபட்டிருக்கிறது. அதில் விசுவாசிகள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறார்கள். ஆயிரம் வருட யுகம் கூட சுவிசேஷ யுகத்திலிருந்து வேறுபட்டிருக்கும்.

ஆயிரம் வருட யுகத்தில் அறிவும் பொறுப்பும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களை கட்டுப்படுத்தாது. ஏனெனில் "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" என்றும் "அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை (யேகோவாவை) அறிந்திருப்பார்கள்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. (ஏசாயா 11:9; எரேமியா 31:34)

அர்ப்பணம் செய்தவர்கள், "தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும்" என்கிற கட்டளை இனி இருக்காது. ஏனெனில் அந்த காலத்தின் அர்ப்பணம் செய்தவர்கள் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த அவசியமிருக்காது; அவர்கள் ஓரளவுக்கு தரிசித்து நடப்பார்கள். இப்பிரபஞ்சத்தின் தேவானகிய சாத்தான், விசுவாசிகளைத் தவிர மற்ற அனைவரையும் குருடாக்கி வஞ்சிப்பது இனி இருக்காது. ஏனெனில் சாத்தான் இனி யாரையும் வஞ்சிக்காதபடி கட்டப்படுவான். "இந்த உலகமானது" (யுகம்) "நீதிவாசமாயிருக்கும்" "இனி வரும் உலகத்திற்கு" (யுகம்) இடம் கொடுக்கும். "குருடரின் கண்கள் திறக்கப்படும்."(எபிரேயர் 2:5; 2 பேதுரு 3:13; ஏசாயா 35:5)

இப்படியாக அறிவானது பொதுவானதாக இருக்கும் போது மாபெரும் ஒளிக்கு விரோதமாக பாவம் செய்வதும் பொதுவானதாக இருக்கும். அப்பொழுது தெய்வீக சலுகையை ஏற்றுக்கொண்டு தெய்வீக உதவியை பயன்படுத்துகிறவர்கள் பூரணத்தையும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சலுகையை அறிவுப்பூர்வமாக மறுக்கிறவர்கள் இரண்டாம் மரணத்தில், நித்திய மரணத்தில், நம்பிக்கையற்ற மரணத்தில் மரிப்பார்கள்.

இப்போது நாம் யூதாஸ் காரியத்துக்கு திரும்புவோம்; யூத யுக அறுப்பில் கர்த்தரின் பிரசன்ன காலத்தில் யூதாஸ் சோதனையையும் தோல்வியையும் அடைந்த காலத்தின் நிலைமையை நாம் கவனிப்போம். அந்த காலத்தின் சூழ்நிலைகளும், தற்கால யுகம் மற்றும் ஆயிரம் வருட யுக நிலைமைகளும் அதனால் பொறுப்புகளும் வேறுபட்டன. நமது கர்த்தர் பிரசன்னமாகி, "இனிவரும் உலகத்தின் பெலன்களை" விளக்கும் வண்ணமாக அநேக ஆச்சரியமான காரியங்களை நடப்பித்தார். சத்தியம் ஜனங்களுக்கு போதிக்கப்பட்டது. சத்தியத்தைக் கேட்டு அதை நிராகரித்து ஒளியைக் காட்டிலும் இருளை நேசித்தவர்களுக்கு "அடிகளையும்" "துன்பங்களையும்" அது கொண்டுவரும் என்று கர்த்தர் அறிவித்தார். சத்தியத்தை நிராகரிப்பதால் இவர்களில் சிலர் "அநேக அடிகளுக்கு" பாத்திரவான்களாக கருதப்படுவார்கள் என்று அவர் அறிவித்தார். ஆகையால் நியாயத்தீர்ப்பின் நாளில் அவர்களைக் காட்டிலும் சோதோம் கொமோராவுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும். நமது கர்த்தர் அறிவித்தாவது: "வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்கு பாவமிராது." (யோவான் 15:22,24)

ஜனங்கள் கண்டு, கேட்டதினால் அப்படிப்பட்ட பொறுப்பை உடையவர்களாக அவர்கள் இருப்பார்களானால், தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கும் எவ்வளவு அதிகமான பொறுப்பு இருந்திருக்கும்! "நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோம்" என்று வெளியரங்கமாக அறிவித்தார்கள். அவர்கள் எப்பொழுதும் அவர் கூடவே இருந்தார்கள். அவர் நடப்பித்த அநேக வல்லமையான செய்கைகளை அவர்கள் கண்டார்கள். அவைகளை திரளான ஜனங்கள் பல இடங்களில் பார்த்தார்கள். அப்போஸ்தலர்களை அழைத்து, ஓரளவு தமது ஆவியையும் வல்லமையையும் கொடுத்து அவரைக்குறித்தும் அவரது ராஜ்யத்தைக் குறித்தும் அறிவிக்கவும் அற்புதங்களை செய்யவும், அவரது நாமத்தினால் பிசாசுகளை துரத்தவும் வியாதியஸ்தர்களை சொஸ்தப்படுத்தவும் அனுப்பினார்.

அப்போஸ்தலர்கள் தெய்வீக திட்டத்தைக் குறித்த நுண்ணறிவையும் ஜனங்களுக்கு கொடுக்காத அறிவொளியையும் இந்த யுகத்தில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டவைகளுக்கு சமமானதையும் பெற்றார்கள். கர்த்தர் திரளான ஜனங்களுக்கு உவமைகளாகவும் கருகலாகவும் பிரசங்கித்தார். ஆனால் அப்போஸ்தலர்களுக்கு அதை விளக்கிக் கூறினார். அவர்களுக்கு கூறினதாவது: "தேவனுடைய ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகள் எல்லாம் உவமைகளாக சொல்லப்படுகிறது." மறுபடியும் அவர் கூறியதாவது: "உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளை கேட்கவும் விரும்பியும் காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 13:11-17; மாற்கு 4:11)

கர்த்தருடைய வல்லமையான செய்கைகள் சிலவற்றை கண்ட அவருடைய ஜீவனுள்ள வார்த்தைகளில் சிலவற்றை உவமைகளாக கேட்ட ஜனங்கள் ஒளியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் "அடிகளுக்கு பாத்திரவானாயிருப்பான்" என்றால், அதிகமானவைகளை பார்த்தவர்களும் அவரது வல்லமையால் அற்புதங்களை செய்தவர்களும், ஜீவ வார்த்தைகளை உவமைகளாக மாத்திரமல்ல அவற்றின் பொருளை மாபெரும் போதகர் மூலமாக கேட்டவர்களுமாகிய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பொறுப்பைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? (மத்தேயு 13:36-43; மாற்கு 4:10-20) மரணத்திற்கு குறைவாக என்ன தண்டனை, நம்பிக்கையற்ற அழிவு. "குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேன்" என்று தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இசைவாக இவைகளில் ஒன்றுக்கு தகுதியானவன் என்று நாம் எண்ணிக்கொள்ளலாமா?

பிலாத்து, ஏரோது மற்றும் ரோம போர்ச்சேவகர்கள் கிறிஸ்துவின் மரணத்திற்கு கொஞ்சம் பொறுப்பானவர்களாக இருந்தார்கள் என்று நாம் தீர்மானிக்கிறோம். "அவனை சிலுவையில் அறையும்! அவனது இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று கூறின திரளான ஜனங்கள் இன்னும் அதிகமான பொறுப்புடையவர்களாக இருந்தார்கள். படிப்பறிவு இல்லாத பொது ஜனங்களை தூண்டிவிட்ட கற்றறிந்த பரிசேயரும், சதுசேயரும் இன்னும் அதிக பொறுப்புடையவர்களாக இருந்தார்கள். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவனது அறிவு மற்றும் விருப்பத்தினால் பிரதான, உண்மையான சிலுவையில் ஏற்றினவனாக இருந்தான். (மத்தேயு 23:15-33)

நமது கர்த்தரின் மரணத்திற்கு காரணமாக அநேகர் இருந்தாலும், அவர் முழு பொறுப்பையும், குற்றத்தையும் யூதாஸ் மேலேயே சாட்டுகிறார். அவர் கூறியதாவது: "மனுஷ குமாரன் தம்மைக் குறித்து (தீர்க்கதரிசனமாக) எழுதியிருக்கிறபடியே (மரணத்திற்கு) போகிறார். ஆகிலும் எந்த மனுஷனால் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும்." (மத்தேயு 26:24) எந்த சூழ்நிலைகளின் கீழாவது அல்லது எந்த அனுபவத்திற்கு பிறகாவது அவனுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படவோ அல்லது அவனது பிறப்பினால் எந்த பிரயோஜனமும் இல்லை என்று சொல்லப்படக்கூடாமல் இருக்கக்கூடுமா. (சங்கீதம் 109:6-8; யோவான் 6:70,71; 17:12 வசனங்களைப் பார்க்கவும்)

ஆகையால், அதே போல, (கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையைப் பற்றிய நல்ல அறிவை உடையவர்கள்) மனப்பூர்வமாய் பாவம் செய்து, உடன்படிக்கையின் விலையேறப்பெற்ற இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணினால், அவர்கள் "மறுபடியும் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள்." மேலும் யூதாசைப் போல, அவரது மீட்கும் பொருளின் பலியை மறுதலித்து, "ரபீ, வாழ்க!" என்று கூறி அவரை வஞ்சகத்துடன் முத்தமிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், உண்மையான மேன்மையான, கிறிஸ்துவைப் போன்ற ஆவியை உடையவர்களுக்கு வெறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

### "நீங்கள் உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதிருங்கள்"

பிரியமான நண்பர்களில் சிலர், "யூதாசை கைவிட்டு வெறுக்கிறார்கள்." சிலர், "தாங்கள் மற்றவர்களை விட அன்புள்ளவர்கள் போல காண்பித்து" யூதாசின் மேல் அனுதாபம் கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் வருகிறவர்கள் தெரிந்துகொள்ளப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் குறைவாக கறைபடிந்தவர்கள்; அவர்கள் அடிக்கடி கறைப்படிந்தவர்களாக இருக்கிறார்கள். குறைவாக கறைபடிந்தவர்கள் அடிக்கடி சுய மனநிறைவும் திருப்தியும் உடையவர்களாக உணர்கிறார்கள். அது அவர்களை வருந்திய பாவியாக தேவனிடத்தில் வருவதை தடை பண்ணுகிறது; சாட்டப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியத்தினால் மட்டுமே அவர்கள் நீதிமானாக்கப்படக்கூடும் என்பதை உணர தடை பண்ணுகிறது. ஆனால் கிறிஸ்துவிடம் வந்து அவரது வார்த்தையை கேட்கிறவர்கள், அவர்களது இழிவான

எண்ணங்கள் எவ்வளவு பூரணமில்லாது இருக்கிறது என்பதை சீக்கிரத்தில் கற்றுக்கொள்கிறார்கள். அவரது சிந்தையை நாடி அடைகிறார்கள். அவர்களது சொந்த தீர்மானங்களுக்கு பதிலாக அதிலிருந்து அதுவே அவர்களது சிந்தையாகிறது. "நாங்கள் கிறிஸ்துவின் சிந்தையை பெற்றிருக்கிறோம்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார்; இது எங்களது "புதிய சிந்தை." "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக எங்கள் மனம் புதிதாக்கப்பட்டிருக்கிறது." (ரோமர் 12:2)

யாருடைய இருதயம் யூதாசிடம் பலமான பச்சாதாபமாக இருக்கிறதோ அவர்கள் தங்கள் சந்தேகங்களில் பெரும்பாலனாவைகளை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தாலும் இந்த காரியத்தை அவர்கள் அவரிடம் ஒப்புக்கொடுக்கவில்லை. அதற்கான காரணம் கிறிஸ்தவ குணலட்சணத்தின் சாரத்தைக் குறித்து வேத வாக்கியங்கள் எங்கும் குறிப்பிடுகிற உண்மையான அன்பை யூதாசின் மேல் தாங்கள் கொண்டிருப்பதாக நினைத்து தங்களையே வஞ்சித்துக் கொள்வதாக தெரிகிறது. ஆனால் அவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். தீமையான காரியத்தை நேசிப்பது நல்ல காரியத்தை வெறுப்பதற்கு சமமானது. இரண்டுமே தவறானது; இரண்டுமே பாவமானது; இரண்டுமே சீரழிந்த சிந்தையானது, புதுப்பிக்கப்படவில்லை, மாற்றியமைக்கப்படவில்லை, கிறிஸ்துவின் சிந்தைக்கு மறுரூபமாக்கப்படவில்லை என்பதற்கு சாட்சியமாக இருக்கின்றன.

கர்த்தரின் வசனத்தினால் மனதில் பதியவைக்கப்பட்ட கர்த்தரின் சிந்தை இனிமையானதை, சுத்தமானதை, உண்மையானதை, மேன்மையானதை நேசிக்க வேண்டும். நாம் (அனுதாபம் என்ற பொருளில்) பலவீனமானவைகளை, மனம் வருந்துகிற ஒடுக்கப்பட்டவர்களை, நீதி மற்றும் சத்தியத்தின் வழியை தேடுகிறவர்களை நேசிக்க வேண்டும். எந்த "பொய் வழியையும்," அக்கிரமத்தையும் நாம் வெறுக்க வேண்டும். சாத்தானுடையதும் ஒளிக்கு எதிரானதுமான சகல மனப்பூர்வமான பாவத்தையும் அற்பத்தனத்தையும் நாம் வெறுக்க வேண்டும்.

சரித்திர ஏடுகளில் அறியப்பட்ட மிகவும் வெறுக்கத்தக்க குணலட்சணமுடையவர்களில் ஒருவரை நேசிப்பதில் பெருமை கொள்வதை நிறுத்துங்கள். அவர்களில் நமது கர்த்தர் உலகத்தின் மேல் அன்புகூர்ந்து (அனுதாப அன்பு) அதற்காக தன் ஜீவனைக் கொடுத்தார். அவர் கூறியதாவது: "அந்த மனிதன் பிறவாதிருந்தானானால் நலமாயிருக்கும்." தேவனுடைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுங்கள். "நீதியை செய்கிற எவனும் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். (மனப்பூர்வமாய்) பாவம் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (கலாத்தியர் 6:7; 1 யோவான் 3:6,7)

நாம் கர்த்தரைக் காட்டிலும் அதிகம் நேசிக்கிறவர்களாவோம் என்று எப்பொழுதும் நினைக்கக்கூடாது. நாம் அவரது வரையறையை ஏற்கிறோம். தேவனுடைய சாயலாயிருக்கிற பிரியமான குமாரனுடைய நியமத்தை மனதளவில் உறுதிப்படுத்த நாடுகிறோம். அவர் நேசிக்கிறவர்களை அவர் நேசிப்பது போல நாம் நேசிக்க விரும்புகிறோம். அவர் வெறுக்கிறவர்களை நாமும் வெறுக்க விரும்புகிறோம். அவரைக் குறித்து எழுதப்பட்டிருப்பது: "நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (எபிரேயர் 1:9; சங்கீதம்45:7) "கர்த்தாவே உம்மை பகைக்கிறவர்களை நாம் பகையாமல் இருப்பேனோ?.....முழுப் பகையாய் அவர்களை பகைக்கிறேன்." (சங்கீதம் 139: 21,22)

சாத்தானோ அல்லது யூதாசோ அல்லது எந்த ஜீவியும் நித்திய அக்கினியில் வேதனைப்பட மாட்டார்கள் என்பதால் நாம் சந்தோஷப்படுகிறோம். ஆதாமின் சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கர்த்தரைக் குறித்தும் நீதியின் வழியைக் குறித்தும் அறிவைப் பெற முழுமையான சரியான சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்பதால் சந்தோஷப்படுகிறோம். அதற்கு மாறாக, சத்தியத்தில் சந்தோஷப்படாமல் அக்கிரமத்தில் சந்தோஷப்படுகிறவர்கள் இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாக நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதால் சந்தோஷப்படுகிறோம். ஆறாயிரம் வருடங்களுக்கு மேலாக அநீதியை ஏற்படுத்தி, தீமை, வலி மற்றும் துக்கம் ஆகியவற்றை உண்டாக்கி சந்தோஷப்படுகிற, இரட்சிப்பின் வேலையைக் குறித்து தெளிவான அறிவுடன் ராஜ்யத்தையும் மகா இரட்சிப்பையும் எதிர்க்கிற சாத்தானை நாம் வெறுக்கிறோம். ஒளி மற்றும் சத்தியத்திற்கு எதிராக இந்த சகல போராட்டத்திற்குப் பிறகு சாத்தானின் மாற்றத்தை நம்புகிற ஒருவன் விபரீதமான மனதைப் பெற்று "இப்பிரபஞ்சத்தின் தேவனால்" மிகவும் சோகமாக குருடாக்கப்பட்டிருக்கிறான். அந்த மனம் கர்த்தருடைய வார்த்தைக்கு முற்றிலும் முரண்பாடானது.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**